திருவள்ளுவர் ஆண்டு 2041

நவம்பர் - 2010

# செந்தமிழ்


தொகுதி : 55
பகுதி : 1
விலை ரூ. 10/-

திங்கள் இதழ்



மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

# மதுரைத் தமிழ்ச்சங்கம்
# 110ஆம் ஆண்டு தொடக்க நாள் விழா



மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம்
கண்ட வள்ளல்
பொன். பாண்டித்துரைத் தேவர்
அவர்களின் திருவுருவச் சிலைக்கு
மாலை அணிவித்து மரியாதை
செய்கிறார் செந்தமிழ்க் கல்லூரிச்
செயலாளர் திரு. இரா. குருசாமி
அவர்கள். உடன் தமிழ்ச் சங்கச்
செயலாளர் திரு. இரா. அழகுமலை,
ஆட்சிக்குழு உறுப்பினர்கள்
திரு. க. முத்தையா பசும்பொன்
திரு. சு. வீரணசாமி



விழா தொடக்கவுரை
ஆற்றுகிறார்
தினமணி நாளிதழ் ஆசிரியர்
திரு. கி. வைத்தியநாதன் அவர்கள்.
உடன் மதுரைத் தமிழ்ச்சங்கம்
மற்றும் தென் மாநிலத்
தமிழ்ச் சங்கங்களின் நிர்வாகிகள்



தமிழ்ச்சங்கச் செம்மல் பெரும்புலவர்
இரா. இளங்குமரனார் அவர்களுக்கு
பொன்னாடை அணிவித்து
நினைவுப் பரிசு வழங்குகிறார்.
தமிழ்ச்சங்கச் செயலர்
திரு. இரா. அழகுமலை அவர்கள்.
உடன் தமிழ்ச்சங்கத் தலைவர்
மன்னர் நா. குமரன் சேதுபதி,
தினமணி ஆசிரியர்
கி. வைத்தியநாதன்,
செந்தமிழ்க் கல்லூரிச் செயலாளர்
இரா. குருசாமி, ஆட்சிக்குழு
உறுப்பினர் திரு. சு. வீரணசாமி

# செந்தமிழ்

(தோற்றம் 1903)


தொகுதி : 55 திங்கள் இதழ்

பகுதி : 1 திருவள்ளுவர் ஆண்டு 2041

நவம்பர் 2010




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867-02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 1000 | |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000 | ரூ. 6000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |


**முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி**

தலைவர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்.

---

**ஆசிரியர்**

**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,

செயலாளர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்,

மதுரை.

# பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| பழனிமலைத் தொடரில் பராவரும் கோயில்கள் | ஆதி. பாலசுந்தரன் | 4 |
| சிந்திக்க வைக்கும் அங்கதக் கவிதைகள் | தமிழண்ணல் | 12 |
| ஒரு நாடு. ஓர் அரசன் | ஆறுவிரல் ஐம்பொறி | 16 |
| வாழ்க தமிழ் ! | வி. நாகசுந்தரம் | 18 |
| புறநானூற்றில் முதுமக்கள் தாழி | கு. காளீஸ்வரி | 21 |
| கீழ்க்கணக்கு நூல்களில் அறமும் கல்வியும் | ப. கதிரவன் | 26 |
| நாலடியார், திருக்குறள் நவிலும் நற்சிந்தனைகள் | திருமதி. ப. தமிழ்க்கனி | 31 |
| ஆதவனின் சிறுகதைப் பின்புலம் | த. அண்ணாதுரை | 35 |
| தமிழ் ! எத்தனை தமிழ் !! | கவிமாமணி சேலம் பாலன் | 39 |

# இதழ் மணம்

அன்புடையீர்,

செந்தமிழ் வாசகர்களுக்கு வணக்கம்.

இம்மாத இதழ் ஒன்பது படைப்பாளர்களின் படைப்புக்களோடு தங்கள் கரங்களில் தவழ்கிறது.

தனிநிலை ஆய்வாளரான ஆதி. பாலசுந்தரன் அவர்களின் 'பழனி மலைத் தொடரில் பராவரும் கோவில்கள்' என்னும் ஆய்வுக் கட்டுரை மிகவும் அற்புதம். அரிய செய்திகளை வரலாற்றுக் குறிப்புக்களோடு அறிய வைத்துள்ளார்.

'இளங்கதிர்' என்பவர் எழுதிய 'தாழ்ந்த என் தாயகமே' என்னும் கவிதை நூலை நமது தமிழ்ச்சங்கச் செம்மல் 'தமிழண்ணல்' அவர்கள் படித்ததன் நற்பயனே 'சிந்திக்க வைக்கும் அங்கதக் கவிதைகள்'. இதன் பயனாக மூல நூலைத் தேட வைத்திருக்கிறார்.

ஆறுவிரல் ஐம்பொறி அவர்கள் ஒரு சொல்லைப் பயன்படுத்தக் கூடிய இடங்களையும் பயன்படுத்தக்கூடாத இடங்களையும் நம்மை அறிய வைக்கிறார்.

'பொதினி' என்ற சொல்லே பிற்காலத்தில் பழனி என வழங்கப்படுவதாயிற்று என்பன போன்ற ஆய்வு முடிவுகளை வி. நாகசுந்தரம் அவர்களின் 'வாழ்க தமிழ்' என்ற வடிவமைப்பில் காணலாம்.

முதுமக்கள் தாழிகளைப் புகழ்பெற்ற மன்னர்களுக்காக மட்டுமல்லாமல் சாதாரணக் குடிமக்களுக்கும் பயன்படுத்தியிருக்கின்றனர் என கு. காளீஸ்வரி கூறுகிறார். மேலும்

அறிய வேண்டியவற்றை கீழ்க்கணக்கு நூல்களில் அறமும் கல்வியும் என்ற ப. கதிரவனின் கட்டுரை அறிய வைக்கிறது. திருமதி. ப. தமிழ்க்கனியின் நற்சிந்தனைகள், த. அண்ணாத்துரை அவர்களால் கட்டப்பட்ட ஆதவனின் சிறுகதைப் பின்புலம் கவிமாமணி சேலம் பாலன் அவர்களின் 'தமிழ் ! எத்தனை தமிழ் !' என்ற கவிதையோடு நவம்பர் மாத இதழைத் தங்கள் கரங்களில் தவழவிடுவதில் பெருமைப்படுகிறோம்.

**முனைவர் க. சின்னப்பா**

இனி நீங்களும் இதழும்....

# பழனிமலைத் தொடரில் பராவரும் கோயில்கள்

*ஆதி. பாலசுந்தரன்*
நாகர்கோவில்

தமிழகத் தொல் வரலாற்றுத் தொடர்புடைய செய்திகள் பல குமரிக் கண்ட ஆழ்கடலுள் மறைந்து கிடப்பன போன்று, குறிஞ்சி நிலமாகிய மலைகளிலும் புதையுண்டு கிடக்கின்றன.

பழனிமலைத் தொடரில் கீழ், மேல் பழனி மலைப் பகுதிகளில் தமிழ் நாட்டு வரலாறு, இலக்கியம் சார்ந்த விழுமிய பல செய்திகள் தெரிய வருகின்றன.

அவற்றுள், அப்பகுதிகளில் அமைந்துள்ள வரலாற்றுத் தொடர்புடைய மூன்று திருக்கோயில்களைப் பற்றிப் பார்ப்போம்.

**க. பூம்பாறை குழந்தை வேலப்பன் கோயில்**

கோடைக்கானல் நகரியத்திலிருந்து சற்று வடக்கே 15 கி.மீ தொலைவில் பூம்பாறை என்னும் மலைச் சிற்றூர் அமைந்துள்ளது. சுற்றிலும் மலை சூழ்ந்து நிற்க, நடுவே அமைதி நிறைந்த ஊர்.

இவ்வூரில் பழைமை வாய்ந்த கோயில் ஒன்று உள்ளது. இதன் காலப் பழைமையை ஆராய்ந்தால், சங்க காலத்தை ஒட்டி எழுப்பப்பட்டதாகத் தெரிகிறது. பழனி முருகன் கோயிலைப் போன்றே, சேர நாட்டைப் பார்ப்பது போல் மேற்கு நோக்கிய வண்ணம் அமைந்துள்ளது.

கருவறையில் எழுந்தருளியுள்ள மூலவர் முருகப்பெருமானின் திருப்பெயர் குழந்தை வேலப்பன் என்பது. இப் பெயர் சங்ககாலப் பெயராக அமைவதற்கு வாய்ப்புக் குறைவாகவே தெரிகிறது.

குறிஞ்சிக் கடவுள் - சேயோன் - குழந்தை. குறிஞ்சி நில மக்களின் தொழில்களுள் ஒன்று வேட்டையாடுதல். வேட்டைக் கருவிகளுள்

வேலும் ஒன்று. தங்கள் வேட்டுவக் குடியைப் பாதுகாக்கும் பொருட்டும், தங்களுக்கு உணவு வழங்கும் வேட்டைக் கருவியாக வேல் பயன்படுவது பற்றியும் சேயோனாகிய குழந்தையின் கையில் வேலைச் சேர்த்தனர். மலையாள மொழியில் 'அச்சன்' என்னும் சொல்லுக்கு இணையான 'அப்பன்' என்னும் தமிழ்ச் சொல்லை இணைத்தனர்; குழந்தை வேலப்பன் பெயர் ஏற்பட்டது. தொல்காப்பியனார், 'சேயோன்' என வரையறுத்துச் சொல்லியுள்ளார். அதற்கு ஏற்ப, எல்லா மலைகளின் மீதும் மேவியிருப்பவன் முருகன் என்னும் பெயராலேயே வழிபடப் பெறுகிறான். எங்கணும் குழந்தை வடிவினனே. அவ்வகையில் குழந்தை வேலப்பன் இயைந்து வருகிறது. தண்டபாணி பெயர் மாற்றம் கோயில் எடுப்பித்தார் கொள்கைக்கும் முரண். அலைவாய் வெற்றி வேலன், ஜயந்தி நாதர் என மாற்றம் பெற்றதன் நோக்கம் புரியும்.

இவ்வேலப்பர் கோயிலைச் சுற்றிலும் பரந்து விரிந்த நிலையில் செண்பக மரங்கள் நிறைந்து நின்றன. இச்செண்பக மரங்களில், மதிய நிலா நாளில் (முழு நிலவு நாள். முழுநிலவு நாளை, மதிய நிலா என இம்மலைவாழ் பழங்குடி மக்கள் கூறுவர்) மலர்கள் பூத்துக் குலுங்கும். இப் பகுதி முழுவதும் மணம் கமழும்.

இம்மலருக்கு ஒரு சிறப்பியல்பு உண்டு. மோந்து பார்த்தால், மூக்கிலிருந்து குருதி கசியும். எனவே, யாரும் மோந்து பார்க்க மாட்டார்கள். இக்காரணம் பற்றியே, வண்டுகளும் இம்மலரை மொய்க்கமாட்டா எனப் பழங்குடியினர் சொல்லுகின்றனர். இவர்கள் இம்மலரை 'வண்டுணா மலர்' என்றே சொல்லுகின்றனர். என்ன அரிய சங்க காலப் பழஞ்சொல் இவர்கள் நாவில் !

'சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தள்' எனக் காந்தள் மலரை வண்டுகள் மொய்க்க மாட்டா என நக்கீரர் இயம்புவது நினைவு வரும். 'சுரும்பு உண விரிந்த காந்தள்' (அகம்- பா. 152. அ. 17) என எதிராகவும் வரும். (1950 ஆம் ஆண்டுக்குப் பிறகு, எஞ்சியிருந்த சண்பக மரங்களையும் அழித்து, அந்நிலத்தில் பூண்டு, உருளைக் கிழங்கு விளைவிக்கத் தொடங்கிவிட்டனர்)

மலர்கள் பொதுளிய சண்பக மரங்களுக்கு நடுவே இவ்வூரும் கோயிலும் அமைந்துள்ளன.

**பூம்பாறையா?**

இச்சிற்றூரின் பெயர் பூம்பாறை என்பது. இப்பெயரின் பழைய வடிவம் பூம்பொறை என்றே இருந்திருத்தல் வேண்டும். பிறகு மருவி, பூம்பாறை ஆயிற்று.

இவ்வூரைக் குறிப்பிடும் போது, ''பூம்பாறை'' எனவும், வேலவரைச் சுட்டும் போது, ''பூம்பொறை வேலவர்'' எனவும், இம்மலைவாழ் பழங்குடியினர், தங்களின் வாய்மொழிப் பாடல்களில் பாடுகின்றனர்.

அதாவது, ஊரைச் சொல்லும் போது பூம்பாறை. வேலவரைச் சொல்லும் போது, பூம்பொறைவேலவர் என வேறுபடுத்திக் கூறுகின்றனர். ஊருக்கு ஒருபெயர்: கோயிலுக்கு ஒரு பெயர்.

''தங்ஞைத் தளிக்குளத்து அப்பர்'' ''கருவூர்ப்பசுபதியீச்சுரம் உடையார்'' என ஊருக்கும் கோயிலுக்கும் தனித்தனியே பெயர்கள் அமைந்திருப்பதைப்போன்றே, பூம்பாறையும் அமைந்திருக்கலாம் எனச் சொல்லத் தோன்றுகிறது.

இப்பூம்பொறைக் கோயில் வழிபாட்டுக்குத் தரைச் செலவாக அடியார்கள் புடை சூழ வந்த அருளாளர் அருணரிநாதப் பெருமான், இம்முருகப்பெருமான் மீது திருப்புகழ் பாடியுள்ளார். இப் பூம்பொறைத் திருப்புகழில், ''பூம்பொற மேவிய பெருமாளே'' எனப் பூம்பொறை என்றே குறிப்பிடுகின்றார். எனவே, பூம்பொறை என்னும் கோயிலுக்குரிய பழம்பெயரே ஊருக்கும் ஆகி வந்தது, பூம்பாறை என மருவியது.

கோயிலுக்குப் பூம்பொறை என்னும் பெயர் வரக்காரணம் என்ன?.. சேரமன்னர்களுக்கும் பழனிமலைத் தொடருக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. இதற்குச் சான்று பகரும் வண்ணம் கல்வெட்டுக்களும், அகழ்வாய்வுகளும் கிடைத்துள்ளன; கிடைத்தும் வருகின்றன. இப்பகுதிக்குச் சேரமன்னர்கள் வருவதும்,மலைவளம் காண மலைச்செலவு மேற்கொள்வதும் உண்டு.

உதகையில் கூடலூர் அருகில்,''நாடுகாணிசேரன் நகர்'' என்னும் ஓர் இடம் உள்ளது.சேரமன்னருள் ஒருவன் அவ்விடத்துக்கு வந்த தன் நினைவாக அப்பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

அது போன்று, இங்கும் பழனிமலைத்தொடரில், பூம்பொறைக்குச் சேர மரபினருள் ஒரு பிரிவினரான பொறை மன்னருள், பொறையன் ஒருவன் வந்துள்ளான். அவன் வந்ததன் நினைவாக, ஆங்குத்

திணைக்குப் பொருத்தமான முருகனுக்குக் கோயில் எடுப்பித்தான். இவன் வந்தபிறகே, முன்னர்ப் பெயர் வழங்காத அவ்விடம், மன்னன் பெயருடன் பூ என்னும் அடைமொழி இணைந்து பூம்பொறை என வழங்கலாயிற்று.

இவ்வூருக்கு அருகில் ''மன்னவனூர்'' என்னும் சிற்றூர் உள்ளது. மன்னன் ஒருவன் அவ்வூருக்கு வந்ததால் அப்பெயர் ஏற்பட்டதாக அம்மக்கள் கூறுகிறார்கள். அவ்வாறு வந்தவன் 'பொறை' மன்னனாக இருந்திருக்கக் கூடும்.

இப்போதும் அக்கோயிலில் நாள் வழிபாடும், திருவிழாக்களும் நடைபெற்று வருகின்றன. மரங்கள் அடர்ந்த சோலைக் காடுகளும், வனவிலங்குகளும் முன்பு வாழ்ந்த கோடைமலை என்று மட்டுமில்லாமல், செம்மொழித் தமிழ்ப் பண்பாட்டு பழைமை தெரியவரும் பண்டைத் தழிழக வரலாற்றுச் சான்றையும் அம்மலை கொண்டு விளங்குகிறது.

## உ. தரிசன லிங்கேசுவரர் திருக்கோயில்

திண்டுக்கல்-பழனி நெடுஞ்சாலையில், ஒட்டன்சத்திரம் ஊரிலிருந்து தென்பக்கம் மலையேறி, கீழ்ப்பழனிமலைப்பகுதிக்கு வரலாம். இங்கு 3000 அடி உயரத்தில் அமைந்துள்ளது பாச்சலூர் என்னும் மலைச் சிற்றூர். பால்-செல்-ஊர்-பாச்சலூர் எனப் பெயர் வந்ததாக அங்கு வாழும் மக்கள் சொல்லுகிறார்கள்.

சிவபெருமான் நிகழ்த்தியவற்றுள் தொகுக்கப் பெற்ற அறுபத்து நான்கு திருவிளையாடல்களுள், பன்றிக்குட்டிகளுக்குப் பால் கொடுத்த திருவிளையாட்ல் நிகழ்ந்த இடம் இம்மலைக்காட்டுப் பகுதி எனவும் சொல்லுவர். இவ்வாறு பால் புகட்டியதைக் கொண்டு பால் செல் ஊர் எனச் சொல்கிறார்களோ.

இப்பகுதியில் 'ஆடலூர்' என்னும் ஊரும் உள்ளது. பால் கொடுத்த திருவிளையாடலைச் சுட்டும் விதத்தில் 'ஆடல் ஊர்' என்னும் இப்பெயர் அமைந்துள்ளது.

அருச்சுனனுக்கும், வேட்டுவ வடிவில் வந்த சிவபெருமானுக்கும், வேட்டையாடிக் கொன்ற காட்டுப் பன்றி மீது உரிமை கொண்டாடுவதன் பொருட்டு விற்போர் நிகழ்ந்த இடம் இப்பகுதி. விற்போர் நடந்த இடம், இவ்விடம் 'பன்றிமலை' என வழங்கப்படுகிறது.

ஆடலூர், பன்றிமலை ஆகிய பெயர்கள் அம்மக்கள் குறிப்பிட்ட பால்-செல்-ஊரின் பெயர்க்காரணத்தை நினைக்கத் தூண்டுகின்றன.

சிவ பெருமானின் இவ் வேட்டுவ வடிவத்தைக் ''கிராத வேடமொடு கிஞ்சு வாயவள்''- எனக் கிராதவேடம் என வாதவூரர் குறிப்பிடுகின்றார். கிராதன்- கொடிய வேடன். விற்போர் முடிவுற்று அர்ச்சுனன் இளைத்த நிலையில், பெம்மான் அவன்முன் காட்சி கொடுத்தருளுகிறார். இதனை, ''கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு குணமாய வேட விகிர்தன்'' எனக் கோளறுபதிகம் கூறும்.

இவ்வியத்தகு செயலைக் கேள்விப்பட்ட பிற்காலப் பாண்டிய மன்னருள் ஒருவன், பாச்சலூரில் சிவன் கோயில் எடுப்பித்தான். அர்ச்சுனனுக்குத் தரிசனம் கொடுத்த அவ்விட்டத்தில் கட்டிய இக்கோயிலின் மூல லிங்கத்துக்குத் 'தரிசன லிங்கேசுவரர்' என்னும் பெயரும் பொருத்தமாக அமைந்தது; தரிசனலிங்கேசுவரர் கோயில்.

பிற்காலப் பாண்டிய மன்னருள் ஒருவனான ராஜசேகர பாண்டியன் தன் பரிவாரங்களுடன் இப்பகுதிக்கு மலை வளம் காணவும், மக்கள் குறை தீர்க்கவும் வரும்போது, கோயில் இல்லாத இடங்களில் கோயில்கள் அமைக்கவும் எண்ணினான். இதற்காகக் கோயில் கட்டுவதற்குத் தகுந்த இடம் தேர்வு செய்வதில் வல்லுநனும், சிற்ப நூல் வல்லானுமான செல்வனாசாரி என்பவனைக், கூடவே அழைத்துக் கொண்டு சென்றான் என்னும் சொய்தியைக் கூறும் செப்புப்பட்டயம் ஒன்று, மேல் பழனிமலை கூக்கால் என்னும் ஊரில், (கோக்கால் என்னும் சிற்றூர் உதகை மலையில் உள்ளது.) நிலக்கிழார் திரு கே. சேதுநாத மன்னாடியார் மரபுளோர் காப்பில் உள்ளது.

எனவே, இச்செப்புப் பட்டயத்தில் சுட்டப்பட்ட பாண்டிய மன்னன், செல்வனாசாரி வகுத்த நெறியில் இத் தரிசனலிங்கேசுவரர் கோயிலை எடுப்பித்திருக்கலாம்.

''வராக பர்வதக் குகையில் ஜல்லிகை என்னும் சிவபக்தி மிகுந்த பெண், விருப்பாட்சன் என்னும் தன் கணவனுடன் வாழ்ந்து வந்தாள்'' என்று தொடங்கி, புராணக் கதையொன்று, திருத்துறைப்பூண்டி தல வரலாற்றில் தொடர்ந்து செல்கிறது.

கீழ்ப்பனிமலைத் தொடர் பன்றிமலை, திருத்துறைப்பூண்டி தல வரலாற்றில் வராககிரி என வடமொழியில் சொல்லப்படுகிறது. சிவனுக்கு உரிய கண் நெற்றிக் கண். இது மேல் நோக்கி அமைந்திருக்கும். இக்கண் விரூப்பாட்சி எனப்படும். விரூப்பாட்சியை உடையவன் விரூப்பாட்சன்,

சிவபெருமான். விருப்பாட்சி ஊர் இம்மலைப் இப்பகுதியிலும், தருமபுரி அருகிலும் உள்ளது. ஆக, பன்றிமலை, விருப்பாட்சி இரண்டும் அத்தல வரலாற்றிலும் வருகின்றன.

'கிராதார் ஜுனீயம்' என்னும் வடமொழி நூல் ஒன்று, பாரவி என்பார் எழுதியது. கிராதனாகிய சிவபெருமான், அருச்சுனன் இருவருக்கும் இடையே நிகழ்ந்த சொற்போர், மற்போர், சிவன் காட்சியருளல் ஆகியவற்றை விவரித்துக்கூறும் காவியம். கொன்ற பன்றியின் உரிமை பற்றி இவ்விருவரும் மற்போர் புரிந்த இடம் வராககிரி.

மற்போரில் சிவன்மார்பில் அருச்சுனன் மோதுவது மேலைக் கடல் அலை, மேல்மலைத் தொடரில் மோதுவது போன்று உள்ளது என வருணிக்கின்றார் பாரவி தமிழ் நாட்டுக்காரர். அவர் குறிப்பிடும் வராககிரி இப்பன்றிமலையாக இருக்கக்கூடும்.

மேற்குத் தொடர்ச்சி மலையின் தென் கோடியில், கேரளத்தில் கடலையொட்டி ஒரு பாச்சலூர் உள்ளது. ஆனால், அங்கே, இந்தத் திருவிளையாடல் நடந்தது போன்று தெரியவில்லை. பன்றிமலை அருகில் உள்ள பாச்சலூர் பெயரால் அவ்வூர் அமைந்துள்ளது.

நெல்லை மாவட்டம் பொருநை ஆற்றங்கரையில் புகழ்பெற்ற தலம் திருப்புடைமருதூர். இவ்வூர் நாறும்பூநாதர் சிவன் கோயில் வாயில் நிலைகளில் கிராதார் ஜுனீயக்கதை மரச் சிற்பங்களால் விளக்கப்படுகிறது.

பன்றிமலை, பாச்சலூர், தரிசனலிங்கேசுவரர் பற்றிய செய்திகள் வருவதால் தல வரலாறும் சிற்பச் சிறப்பும் இங்குக் காட்டப்பட்டன.

## குறிஞ்சியாண்டவர் கோயில்

கோடைக்கானல் ஏரிக்கரையிலிருந்து வட மேற்கு நோக்கிச் செல்லும் சாலையில் 3 கி.மீ தொலைவு சென்றால், மலை முகட்டு ஓரத்தில் அமைந்துள்ள குறிஞ்சியாண்டவர் திருக்கோயிலைக் காணலாம். மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி. குறிஞ்சி நிலக் கடவுள் முருகன். ''குறிஞ்சிக் கிழவ!'' என முருகவேளைப் போற்றுவார் நக்கீரர். அப்பெருமானுக்கு இத்திருக்கோயிலை அமைத்தவர் யார்?.

இலங்கையில் மிகப் பெரிய அரசியல் மேதையாகப் புகழும் பெருமையும் பெற்றுத் திகழ்ந்தவர் சர். பொன்னம்பலம் இராமநாதன் என்னும் யாழ்ப்பாணத் தமிழர் பெருமகனார். ஐரோப்பிய நாடுகளில் கல்வி

கற்ற அவர் சிறந்த சட்டநிபுணர்; அரசியல் சட்ட அறிஞர். தாய்மொழியாகிய தமிழ் மீதும், மரபு வழியாகத் தமக்கு வாய்த்த சைவ சமயத்தின் மீதும் ஆழ்ந்த பற்றும் அறிவும் உடையவர். பரம்பரைச் செல்வ வசதி மிக்க குடும்பத்தில் பிறந்தவர். தமது வழக்கறிஞர் தொழில் மூலம் மிகுந்த செல்வம் ஈட்டியவர்.

''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்''; ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்னும் உயரிய செம்மொழித் தமிழ்ப் பண்பாட்டில் இச்சான்றோர் மிகவும் ஈடுபொடு உடையவர். உலகளாவிய நோக்கும், விரிந்த உளப்பாங்கும் உடையவர். இவ்வரும் மனித நேயப் பண்பாடுகளை உளம் கொண்டு, ஆஸ்திரியா நாட்டு மார்க்கரெட் என்னும் மங்கை நல்லாரைத் திருமணம் புரிந்து கொண்டார். இவ்வம்மையும் கணவனார் வழி செந்தமிழ் மீதும், சைவ சமயத்தின் மீதும், ஆறாக்காதல் கொண்டவர். திருநீறு துலங்கும் நெற்றியும், அக்கமணிமாலை புனைந்த கழுத்தும் கொண்டு திலகவதியாராய்த் திகழ்ந்தார்.

இவ் இணையரின் திருமகனார் திரு நடேசன் இலங்கை நாட்டின் அஞ்சல், தந்தித்துறை அமைச்சராகப் பணியாற்றியவர்.

திரு. இராமநாதன் அவர்கள் தம் துணைவியாருடன் பழனிமலை முருகன் திருக்கோயில் வழிபாட்டுக்கும், கோடைக்கானலில் ஓய்வுக்கும் அவ்வப்போது வருவார். அப்போது முருகனது குறிஞ்சியில் அப்பெருமானுக்குத் திருக்கோயில் இல்லாமையை உள்ளத்தில் கொண்டிருந்தார்.

தம் கணவனார் பேரின்பப் பெருவாழ்வு அடைந்த பிறகு, அவர் விழைந்தவண்ணம், திருமதி லேடிராமநாதன் முற்றிலும் தமது உரிமைப் பணம் கொண்டு 150 ஆண்டுகளுக்கு முன்னர் இக்கோயிலை எடுப்பித்தார். இலங்கை சர். பொன்னம்பலம் ராமநாதன் அவர்களின் நினைவாக, அன்னாரின் துணைவியார் லேடி ராமநாதன் அவர்களால் இத்திருக்கோயில் கட்டப்பட்டது.

கோடைமலை முகட்டின் மீது அமைந்துள்ள இக்கோயில் வட புறம் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பசுமைபடர்ந்த பள்ளத்தாக்கு. கிழக்கிலும் மேற்கிலும் மந்தியும் அறியா மரங்கள் பயின்ற சோலை, மஞ்சுதவழும் இயற்கைச் சூழல். கை புனைந்து இயற்றாக்கவின் பெறு வனப்புக்கிடையே, இக்கோயில் அமைந்திருப்பது உள அமைதியும், மகிழ்வும் தரும் காட்சி.

தென்றிசை நோக்கிய நிலையில் இக்கோயில் அமைந்துள்ளது. நுழைவாயிலில் அழகிய 'ராஜகோபுரம்' வடதிசை நோக்கி நாம் வழிபடும் நிலையில், மூலபுரம் பெருமான் தென்றிசை நோக்கி அருளார் அமுதம்

வழங்குகின்றார். குறிஞ்சித்திணையொடு பொருந்த குறிஞ்சி ஆண்டவர் என்பது மூலவரின் திருப்பெயர்.

இக்கோயிலை இங்கு எடுப்பிப்பதற்கு காரணம், கோயிலின் சிறப்பு முதலிய செய்திகளை வெளித் திருச் சுற்றில், கருவறை வெளிப்பக்கச் சுவரில் சுற்றிலும் பழங்காலக் கல்வெட்டு எழுத்து அமைப்பைப் போன்று தமிழில் பொறித்துவைக்க ஏற்பாடு செய்தவரும் இவ் அம்மைதான்.

கோயிலுக்குள் நுழைந்ததும் வெளிச் சுற்றின் மேல் பக்கம், பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டுமே மலரும் அரிய குறிஞ்சிச்செடி என்றும் பசுமை மாறாமல் உயிர்வாழும் வண்ணம் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

(குறிப்பு; பருவநிலை மாறி, உலகளாவிய கால நிலை மாற்றத்தால், மூன்று மூன்று திங்கள் முன்னதாகவே குறிஞ்சி மலர்ந்து வருகின்றன என இம்மலர் விவரத் தொகுப்பு (Data Correction) ஆய்வாளர் எழுதி வருகின்றனர்.)

இக்கோயிலை எடுப்பித்த சைவப் பெருமாட்டி லேடி இராமநாதன் ஒளிப்படம் ஒன்றும் இக்கோயிலில் வைத்துள்ளனர்.

இக்கோயிலில் நாள் வழிபாடுகள், திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. இக்கோயில் இந்து அற நிலையத்துறை ஆட்சியின் கீழ், பழனி முருகன் கோயில் நேரிடை ஆளுகையில் உள்ளது. பழனிக் கோயில் அனுமதி பெற்றே இக்கோயிலில் புகைப்படம் முதலியன எடுக்கவேண்டும்.

கோயிலுக்கு வெளியே, வட பக்கம் நின்று பார்த்தால் பழனிக் குன்றும், பழனி முருகன் கோயிலும் தெரியும். மஞ்சு சூழ் மலை முகட்டில் அமைந்துள்ள அழகிய அமைதி நிறைந்த திருக்கோயில் இது.

## நிறைவுரை

பழனிமலைத் தொடரில் சங்க காலக் கோயில், பிற்காலப் பாண்டியர் கோயில், பத்தொன்பதாம் நூற்றாண்டுக் கோயில் ஆகியவை வழி தமிழ் மக்களின் வரலாறு, கலாசாரம், பண்பாடு, சிந்தனைத்திறன், மேம்பட்ட செயல்கள் ஆகியவற்றை உணர்ந்து கொள்ளலாம். இவற்றையெல்லாம் சீரியமுறையில் சிந்திப்பதற்குக் கருவியாக உதவி வரும் செம்மொழித் தமிழின் காலப் பழைமை, திண்மை முதலானவற்றையும் அறிந்து கொள்ளலாம்.

# சிந்திக்க வைக்கும் அங்கதக் கவிதைகள்

*தமிழண்ணல்*

மீண்டுமொரு தமிழியக்கம் தமிழரியக்கம் தோன்றவேண்டும். இதற்குத் துணையாகும் துடிப்புள்ள உணர்வாளர் கிடைத்திலர். தமிழ் ஈழத் தற்கால இழப்பைவிடத் தமிழகமே உணர்விழந்து வருகிறது.

அன்மையில் 'இளங்கதிர்' என்பார் எழுதிய 'தாழ்ந்த என் தாயகமே', என்ற கவிதை நூலைப் படிக்க நேர்ந்தது.

இரசிய மொழி, ஆங்கிலக் கவிதைகளில் 'அங்கதம்' நிறைந்தவை ஒன்றிரண்டு படித்ததுண்டு. பாரதி பாரதிதாசனுக்குப் பிறகு, இன்றைய காலக் கண்ணாடியாய், கண்ணெதிரே காணும் இழிநிலைளை எல்லாம் அப்படியே எழுதிக்காட்டி, ஈட்டி ஒன்று பாய்ந்தாற்போல் கவி எழுதி எழுச்சியூட்ட யாருமில்லையே என்று கவன்றதுண்டு.

நேர்மையுடையார் பலரும் குடத்துள் விளக்காக்கப்பட்டு விட்டனர். 'நிமிர்ந்த நன்னடை, நேர் கொண்ட பார்வை, நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறியுடையார்' மிக மிக அருகிப்போயினர். அவ்வாறு சிலர் இருந்தாலும், அவரை ஆதரிக்கக் கூசுகிறது, இச்சமுதாயம். ஒவ்வொருவரும் தனக்குக் கிடைக்கும் எதையேனும் இழக்க நேருமோ என எண்ணி, நேர்மையாளர் பக்கம் திரும்பிப் பார்க்கவும் அஞ்சுகிறார்கள்.

தாழ்ந்த என் தாயகமே - கவிதை நூலில் 21 தலைப்புகள், ஒரு தலைப்புக்கு ஐந்து அறுசீர் விருத்தங்கள் உள. 105 பாடல்களும் இன்றைய நிலையை, நிழற்படம் போல் 'தயவு, தாட்சண்யம்' இன்றி எடுத்துக் காட்டுகின்றன. வில்லம்பு பாயாத இடத்திலும் சொல்லம்பு நுழைந்து, உள்ளத்தைக் கீறி உணர்வை ஒருகணமேனும் உணரவைக்கும் என்பதை, இந் நூற் பாடலடிகள் பல மெய்ப்பிக்கின்றன.

*"என்னுடம்பில் புக்கெல்லா அனுவூடும் புலனூடும்*
*என்பூடும் புகுந்தளாவி, மிக்கிருக்கும் செந்தமிழே*
*வாழிய நீ நலந்தானா?, முன்போல் இன்றே!"*

முதல் பாடலிலேயே, 'தமிழே நீ முன்பு போல் இன்றும் நலந்தானா?' என வினவுகிறார், இப் பாவலர். அறியனை, அங்காடி, ஆலயம், அருச்சனை, பள்ளிகள் என எங்கும் இருந்த தமிழே நீ இப்பொழுது எங்கே இருக்கிறாய்? – என வினவுகிறார்.

கடவுளைக் கண்டவர் யார்? மனிதன் தான் தூயமணம் நற்பண்பு கருணையுள்ளத்தால் கடவுளாகின்றான். அவற்றுக்கு நேர் எதிரானவன் கயவனாகின்றான்.

இன்று நாம் நடமாடும் கடவுளர்களைக் காண்கிலோம். திருக்கோயில் 'புண்ணிய வாணிகக் கூடங்களாயின. தங்கத் தேர் முதல் வைரப்பட்டை, மணிமுடி வரை எல்லாவற்றையும் எனக்குச் செய் என்று நம் கடவுளர்கள் கேட்கிறார்கள். பழம், உணவுவகை, உடைகள், மற்றும் மக்களுக்குப் பயன்படும் அனைத்தையும் அக்கினியில்போட்டு, அத்தேவன் மூலம் எனக்கு அனுப்பி வை என்று நம் கடவுளர்கள் கேட்பதால், இன்று ஒவ்வொரு நாளும் ஏழை எளிய மக்களுக்குப் பயன்படும் கோடிக்கணக்கான பொருள்கள் கடவுளர்க்கு என்று மடைமாற்றம் செய்யப்படுகின்றன. அம்மனுக்கு இரண்டு 'டாங்கு' அளவு பால், அபிடேகம் செய்யப் பெற்றதாம் சிங்கப்பூரில். வினாயகருக்கு அருச்சகர் ஊற்ற முடியாத பத்தர்கள் அளவு பால் கொணர்ந்ததால், குழாய் மூலம் அபிடேகம் ஊற்றப்பெற்றது.

சிலை வடிவாய் நம் உள்ளத்தில் எழுந்தருளுதற்கு அடையாளம் என வீற்றிருக்கும் கற்சிலை வடிவான கடவுளர்க்கு எண்ணெக்காப்பிட்டுப் புனித நீராட்டுதலே அபிடேகம், சிலம்பும் நீர்படைக் காதை என்றே கூறும். சந்தனம், பன்னீர், முதலான நறுமணப் பொருள்களால் இறைத் திருமேனியை விளக்கமுறச் செய்து, மலர் மாலைகளால் அலங்கரித்து எங்கும் நறுமணம் கமழச்செய்வதே தமிழர் கண்ட அபிடேகம். பால், தயிர், தேன், இளநீர், பழம் எல்லாவற்றாலும் அபிடேகம் என்பது ஆரியக் கலப்பால் வந்தவை.

பொதுவான ஓர் உண்மை; இந்து சமயம் என்ற பெயரால் நடப்பவை எல்லாம், மக்களுக்குச் செய்ய வேண்டிய உணவு உடை மருத்துவம் போல்வன அனைத்தையும் பெருமளவு மறக்கச் செய்து, அனைத்தையும் கடவுளர்க்குச் செய்யுங்கள் என்பதே இன்றைய பக்திநெறி. நீங்கள் செலவழிக்கும் அளவாகப் புண்ணியம் கிடைக்கும்., நூறு ரூபாயா அந்த அளவு, ஆயிரமா அந்த அளவு, வைரமுடியா அந்த அளவு புண்ணியம் தருகின்றன நம் கடவுள்கள்.

தமிழன் என்ன நிலைக்கு இன்று ஆளாகியுள்ளான். கும்பாபிசேகம் முதல் கோயில்கள் காட்டுவது வரை, செய்துகொண்டே போனல் தனக்கு தன் குடும்பத்திற்கும் புண்ணியம், மோட்சம், செல்வம், செல்வாக்கு, குடும்பம் என எல்லாம் தழைக்கும் என்ற ஒரே நம்பிக்கையில் அவன் ஊறிப்போனான். கல்விக் கூடம் கட்டுவது, மருத்துவமனை கட்டுவது, ஏதிளாரை வாழவைப்பது, உழைப்பாளியைத் தெய்வமென மதிப்பது, பிறரை வாழவைப்பது எல்லாம் தனக்கு புண்ணியம் ஆகா என்றும் இவை பெற்றுக் கொள்பவற்குப் போய்ச்சேருமே தவிர தனக்கென்ன புண்ணியம் என்றும் கருது மளவு அவன் மூளை மழுங்கடிக்கப் பட்டுவிட்டது.

இளங் கதிர் உழைப் பாளியே கடவுளெனப் பாடுகிறார்.

> ***உடலுழைப்புச் செய்பவரே உலகத்தைப் படைத்தளிக்கும்,***
> ***உயிர்கள் பேணும், கடவுளெனும் கொள்கையிலே***
> ***கால்கொள்ள வேண்டு மிந்தக் காலம்., இன்றேல்***
> ***இடமெங்கும் புலப்படாத, எத்துயர்க்கும் கை கொடாத***
> ***யார்க்கும் தோன்றாக் கடவுளென்ன கடவுளடா, வெங்காயம்?***
> ***கடமை செயும் மனித இனம் கண்ணே யன்றோ?***

இனி இன்றைய இழி நிலைகளை இளங்கதிரார் சாடுவதை ஒவ்வொன்றாய்க் காண்போம்!

நாணம் அச்சம் மடம் பயிர்ப்பு எல்லாம் தவறாக உணரப்பட்டு நடப்பதை ஒரு போதும் ஏலோம் நாம் என்பார். ஆனல் இன்று, பெண், தன்னைக் குறிபார்த்து ஆண் கொக்கு கொத்துதற்கு ஏற்றாற்போல், துகில் நீக்கி, துண்டுகட்டித் தூசே யாகப் புச்ச உரு புலப்படவே புழங்குவதா நாகரிகம் எனக் கேட்கின்றார்.

பகற்கொள்ளை வாணிகத்தைப் பலபடக் கடிந்து பாடுமிவர், அறிவுரைகள் பல கூறி, இவை நிறைவேறா விட்டால் 'நெடும் பகலில் கடைக் கொள்ளை நிகழ்த்த நேரும்' என எச்சரிக்கின்றார்.

நமது நாட்டுத் தேர்தல் தேய்ந்து கழுதையானதைப் பாடும் இவர், 'கோடிமுதல் இருந்தால்தான், கொள்கையிலா அரசியலில் குதிப்பதற்கு நாடிடமே நல்கும் என நமதருமைக் குடியரசு நாட்டிற்றன்றே' என்று சாடுகிறார்.

இன்று திறமை சம்பாதிக்க உதவலாம், ஆயினும் அதுவாங்கும் பணத்தை வைத்து மதிப்பிடப் படுகிறது. ஒன்றுக்கும் உதவாத

'அழிவுகளும் மதிப்புறுமோர் காலத்தில், அறிவென்னும் கருவூலத்தை இழிபொருளாய்க் கருதுவது ஈடற்ற கேடு' என்று மடமை நெஞ்சில் பதிவிக்கின்றார். 'நிறையறிவு பெற்றிடாரே நிணத்தின்னும் பேய் போல, பெருஞ் செல்வம் ஈட்டுகின்றார்., அறிவுடையார் இன்றும் அளவாக வாழ்கின்றார். 'அறிவு தேடி இடந்தோறும் அலைவோர்க்கே எள்ளளவும் மதிப்பில்லை, இஃதோர் நாடா?'

'காலம் பல காலமாக கருத்துடனே ஆராய்ந்தோர் கசங்கி மாய்ந்தார்; ஓலமிடும் அறிவிலிகள் ஒய்யார ஊஞ்சலிலே உட்கார்ந்தாரே.

ஒருவன் செல்வனாவதற்கும் வறியவனாவதற்கும் விதி அவன் தலையில் எழுதியதே காரணம் என்ற சதிகாரக் கருத்தையெல்லாம் சமுதாயப் புதை குழியில் சாக்கடைக்குள் அதிகாரம் கொண்டிங்கே அடக்கிடுவோம் அற நூலின் ஆணை ஈதே'' என்று அறம் பாடுகிறார்.

காசு வரின் எம்மொழிக்கும் கால்வருடும் அடிமையினம் இது. அறிஞர்கள் பட்டம் பதவி பணம் என்று தன்மானத்தைக் கைவிட்டு அலைவதை இவர், அவர் நெஞ்சம் துடிதுடிக்கக் கடிகின்றார். 'மலிந்துவரும் கல்வி எனும் வாணிகத்தார், விரைவாக விற்கின்ற வெறுமையுறு பட்டங்கள் வீணே என்று கூறுகிறார்.

பொதுவாக இன்றைய நடைமுறை வாழ்விலுள்ள இழி நிலைகள் பலவற்றையும், முடிந்தவரை வெளிப்படுத்தி, படிப்பவர் மனம் இவை என்று மாறுமோ என எண்ணி மனமுருகி, உணர்வுற்று, எழுச்சி பெறுமாறு பாடியுள்ள திறன் போற்றுதற்குறியது.

இன்று நம் நாட்டில் நல்ல கருத்துக்கள் எல்லாம் காட்டில் எறித்த நிலவாகிப் போகின்றன. திருக்குறள் முதல் எந்த ஒரு வாழ்வியலையும் ஓங்காரமிட்டு ரீங்காரம் பாடுகின்றோமே தவிர, எதனையும் யாரும் பின்பற்றுவதில்லை.

இன்றைய மக்களிடையே இத்தகைய நூல்கள் பரவி, சமுதாய ஒழுக்கமும், அரசியல் வாழ்வும், ஆன்மீக நெறியும் ஓரளவேனும் திருப்பத்தை ஏற்படுத்து மேல் தமிழர் பண்பாடும் நாகரிகமும் காப்பாற்றப்படும். மேலே கூறியவற்றைத் தங்கட்கு எதிரான கருத்துக்களாகக் கொள்ளாமல், சீறிய முறையில் சிந்தித்துப் பழக அவர்க்கும் நன்மை பயக்கும்.

# ஒரு நாடு, ஓர் அரசன்

ஆறுவிரல் ஐம்பொறி

செந்தமிழ் இலக்கணம் நுட்பமானது அருமையானது இனிமையானது. தொன்மையானது. ஒரு, ஓர் ஆகிய இரு சொற்களையும் பயன்படுத்தக்கூடிய இடங்களையும், பயன்படுத்தக்கூடாத இடங்களையும் தமிழ் இலக்கணம் வரையறை செய்துள்ளது.

'ஓர்' என்ற சொல்லையடுத்து உயிரெழுத்தை முதலெழுத்தாகக் கொண்ட சொல்லே வர வேண்டும். 'ஒரு' என்ற சொல்லையடுத்து உயிர்மெய் எழுத்தை முதலெழுத்தாகக் கொண்ட சொல்லே வரவேண்டும் 'ஓர்' என்ற சொல்லையடுத்து உயர்மெய் எழுத்து வரா. 'ஒரு' என்ற சொல்லை அடுத்து உயர் எழுத்து வாரா.

*ஒரு நாடு. ஓர் அரசன் - இரண்டும் சரி.*
*ஓர் நாடு. ஒரு அரசன் - இரண்டும் தவறு.*

அக்காலமுதல் இக்காலம் வரை எளிதாக எழுதப்படும் உரைநடை நூல்களில் இவ்விதி கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஆனால் முயன்று இயற்றப்படும் செய்யுட்களில் இவ்விதி சில இடங்களில் கடைப்பிடிக்கப்படுவதில்லை. ஓர் என்ற சொல்லையடுத்து உயர்மெய்யெழுத்தை முதலாகக் கொண்ட சொல் அமைந்திருக்கும் சில செய்யுட்களை ஈண்டு காணலாம்.

1. தண்டியலங்காரத்தில் மாத்திரைச் சுருக்கம் என்ற சித்திரகவிக்கு எடுத்துக்காட்டுச் செய்யுளில் ஓர் என்ற சொல்லையடுத்து உயர்மெய்யெழுத்து அமைந்துள்ளதைக் காண்க.

*நேரிழையார் கூந்நலினோர் புள்ளிபெற நீண்மரமாம்*
*நீர்நிலையோர் புள்ளி பெறநெருப்பாம்.......... (ஓர் புள்ளி)*

2. நளவெண்பாவில் 401ஆம் செய்யுளில் ஓர் என்ற சொல்லையடுத்து உயிர்மெய்யெழுத்து அமைந்துள்ளதைக் காண்க.

*நோக்கினாள் நோக்கித் தெளிந்தாள் நுணங்கியதோர்*
*வாக்கினான் தன்னை அறிந்து. (ஓர் வாக்கு)*

3. திருவருட்பாவில் தெய்வமணி மாலையில் ஓர் என்ற சொல்லையடுத்து உயர்மெய்யெழுத்து அமைந்துள்ளதைக் காண்க.

*வளர் கருணை மயமோங்கி யோர்*
*வரமோங்கு தெள்ளமுத வயமோங்கி...............(ஓர் வரம்)*

4. அற்புதத் திருவந்தாதியில் ஓர் என்ற சொல்லையடுத்து உயிர்மெய்யெழுத்து அமைந்துள்ளதைக் காண்க.

*புனற்கங்கை ஏற்றானோர் பொன்வரையே போல்வான்*
*அனற்கங்கை ஏற்றா னருள்.................. (ஓர் பொன்)*

*பனிக்கணங்கு கண்ணியார் ஒண்ணுதலின் மேலோர்*
*தனிக்கண் ணங்குவைத்தார் தகவு (ஓர் தனி)*

5. திருவாசகம் அச்சப்பத்தில் முதல் செய்யுளில் ஓர் என்ற சொல்லையடுத்து உயர்மெய்யெழுத்து அமைந்துள்ளதைக் காண்க.

*மற்றுமோர் தெய்வந்தன்னை*
*யுண்டென நினைந்து............ (ஓர் தெய்வம்)*

6. திருவருட்பா ஆராதனைச் செய்யுளில் ஓர் என்ற சொல்லையடுத்து உயிர்மெய்யெழுத்து அமைந்துள்ளதைக் காண்க.

*தடித்தவோர் மகனைத் தந்தையீண் டடித்தால்*
*தாயுடன் அணைப்பாள் (ஓர் மகன்)*

இவ்வெடுத்துக்காட்டுகளின் மூலம் 'ஓர்' என்ற சொல்லையடுத்து உயிர்மெய்யெழுத்தை முதலாகக் கொண்ட சொல்லைச் செய்யுட்களில் பயன்படுத்தலாம் என்பது தெரிகிறது.

அசை, சீர், தளை, அடி தொடை முதலியவற்றை செய்யுட்களில் அமைக்கும் போது ஏற்படும் இடர்பாடுகளைக் களையவே இவ்விதி (ஒரு நாடு. ஓர் அரசன்) தளர்த்தப்பட்டு இருக்கலாம் என்று தோன்றுகிறது.

எனவே ஒரு சொல்லைப் பயன்படுத்தக்கூடிய இடங்களையும் பயன்படுத்தக்கூடாத இடங்களையும் அறிய வேண்டுவது இன்றியமையாததாகிறது.

# வாழ்க தமிழ் !

வி. நாகசுந்தரம்
சென்னை

## முருகன் நற்போர் நெடுவேளாவி

சின்னாட்களுக்கு முன்னர் 'தினமணி' நாளிதழ் பழனி அருகே மக்கள் வாழ்வியல் தடங்கள் என்ற பொருள் பற்றிய மிக அருமையான செய்தி ஒன்றை வெளியிட்டிருந்தது.

இன்று நாம் 'பழனி' என்றழைக்கும் மலையும் மலை சார்ந்த நகரும், பண்டைய நாட்களில் 'பொதினி' என வழங்கப்பட்டு வந்ததென்பதையும், இவ்வூருக்கு 'ஆவி நன்குடி' என்பதே பழைய பெயர் என்பதையும் சங்க இலக்கியங்கள் வாயிலாக நாம் அறிகின்றோம். இப்பகுதியை ஆண்ட 'ஆவி' என்னும் குறுநில மன்னன் பற்றிச் சங்க இலக்கியங்கள் பலவாறு புகழ்கின்றன. 'முருகன் நற்போர் நெடுவேளாவி' 'ஆவிநன்குடி' 'பொதினி' - இப்பொருண்மைகள் குறித்து இச்சிறு கட்டுரையில் இப்பொழுது நாம் காண்போம் !

## முருக வழிபாடு !

நானிலப் பாகுபாட்டைப் பற்றிக் கூறும் பொழுது தொல்காப்பியர் ''சேயோன் மேய மைவரை உலகம்' என்று சிவபெருமானைப் பற்றிக் கூடக் கூறாது சேயோனை (முருகனை)ப் பற்றிக் கூறுகின்றார். தொல்காப்பியர் காலத்திலேயே முருகன் வழிபாடு தமிழ் நாடு முழுவதும் பரவியிருந்தது என்பதை இதனால் அறிகின்றோம். மேலும் பல்வேறு சங்க இலக்கியங்கள் முருக வழிபாடு பற்றிப் பேசுகின்றன ஏன்? பத்துப்பாட்டில் முதலாவதாகக் குறிக்கப்படும் 'திருமுருகாற்றுப்படை' முதன்மையான, முழுமையான, முருகனைப் பற்றிப் பாடும் சங்க இலக்கியம். முதல் சமய இலக்கியமும் இதுவே !

அகநானூற்றின் முதல் பாடலே 'முருகன் நற்போர் நெடுவேள்' என்று கூறுவதிலிருந்து முருகன் வழிபாடு எந்த அளவிற்குத் தமிழ் நாட்டில் வேரூன்றி இருந்தது என்பதை நம்மால் அறியமுடிகின்றது. மேலும் இதே பாடல் முருகப் பெருமானின் அறுபடை வீடுகளில் ஒன்றான பொதினி (பழனி) யை ஆண்ட மன்னன் 'ஆவி' பற்றிக் கூறுவதிலிருந்து முருகன் வழிபாடு இப்பகுதியில் சிறந்தோங்கி இருந்தது என்பதையும் அறிகிறோம்.

## 'பொதினி – பழனி'

இப்பொதினியை (பழனி) ஆண்ட 'ஆவி' என்னும் மன்னன் வேளிர்குலத்தவன். மிகவும் பழைமை வாய்ந்த குறுநில மன்னர்களில் ஒருவன். இவ்வாவி வேளிர் தலைவனும், சிறந்த வீரனும், 'பொதினி' என்னும் நகர்க்கு உரியவனுமாவான். அகநானூற்று அரும்பத உரைகாரர், 'நெடுவேளாவி - குறுநில மன்னன்; பொதினி - ஆவி மலை' என்று கூறுவதால், இவன் இருந்தாண்ட பொதினி என்ற நகர், அப்பெயர் வாய்ந்த மலையின் கண் உள்ள தென்பது விளங்குகின்றது. இப்பொழுது 'பழனி' என வழங்கப்படும் மலையும், ஊருமெனவும் வழங்கும் பழனிக்கு 'ஆவினன்குடி' என்பதும் சங்ககால வழக்காகத் தெரிய வருகின்றது. பழனி என்ற சொல்வழக்கு சங்க இலக்கியங்களில் காணப் படாமையால், 'பொதினி' என்ற சொல்லே, பிற்காலத்தில் பழனி என வழங்கப்படுவதாயிற்று என்று கொள்வதில் தவறில்லை.

## வையாவி புரி

வேள் ஆவியின் வழியினனாகிய பேகன் என்ற வள்ளலை 'வையாவிக்கோ' எனச் சங்க இலக்கியங்கள் வழங்குவதற்கேற்ப, பழனியிலுள்ள குளம் (மிகப்பெரிய குளம்) இன்றும் வையாபுரி (வையாவிபுரி) என்றே வழங்கப்படுகின்றது. ஆவி - இவ்வாவியின் வழியினர் 'ஆவியர்' என வழங்கப்படுவர். வள்ளல் பேகனை 'ஆவியர்பெருமகன்' எனக் கூறப்படுவதையும் நாம் இலக்கியங்களில் காண்கின்றோம்.

## முழவுறழ் திணி தோள் நெடுவேளாவி

அகநானூற்றின் முதற் பாடலிலேயே, அதிலும் முதலிரு அடிகளிலேயேப் புகழப் படுபவன் 'ஆவி' என்னும் குறுநில மன்னன்.

*'வண்டுபடத் துதைந்த கண்ணி ஒன்கழல்*
*உருவக் குதிரை மழவர் ஓட்டிய*
*முருகன் நற்போர் நெடுவேளாவி''*

பாடியவர் மாமூலனார்!

அஞ்சத்தக்க குதிரைகளையுடைய மழவர்களை வென்றவன்; முருகனைப் போன்ற நல்ல போர் வெற்றியினையும் உடையவன் என்ற பெருமையுடைய வேள் ஆவி!

முழவினை யொத்த வலிய தோளினையுடைய பெரியவேளாகிய ஆவியின் தலை நகர் – பொதினி – 'பொன்னுடை நெடு நகர்ப் பொதினி' என மேலும் அவரே பாடுகின்றார். (அகம். 61) மாமூலனாரின்

'சிறுகாரோடன் பயினொடு சேர்த்திய கற்போர்' (அகம் 1) என்ற சொற்றொடரைப் பரணர் பெருமானும் (அகம் 356) பயன்படுத்தி இருத்தலைக் கண்டு 'இறும்பூது' எய்துகின்றோம். மேலும் பதிற்றுப் பத்து 4, 6, 8ஆம் பத்துகளில் வேளாவிக் கோமானுடைய மகளிர் இருவர் நெடுஞ்சேரலாதன், செல்வக்கடுங்கோ வாழியாதன் ஆகிய சேரவேந்தர்கட்கு வாழ்க்கைப் பட்டவர்கள் எனத் தெரிய வருகின்றது. இவ்வாறு வேளாவி, சேரர் வழியிற் பெண் முறையில் முன்னோனாதல் பற்றிப் போலும், சேரர்களது தலைநகராகிய வஞ்சிப்புறத்தே 'வேளாவிக்கோ மாளிகை' என்ற மாளிகை ஒன்று அவ்வேளின் பெயரால் சேரன் செங்குட்டுவன் காலத்தில் விளங்கியது.

*'பேரிசை வஞ்சி மூதூர்ப் புறத்துத்*
*தாழ்நீர் வேலித் தண்மலர்ப் பூம்பொழில்*
*வேளாவிக் கோ மாளிகை கட்டி'* (சிலம்பு 28:8)

புறநானூற்றில் கருவூர்ப் பக்கத்தில் வேண்மாடமொன்று கூறப்படுதலும், இவ்வேளாவிக்கோ மந்திரமேபோலும் ! மதுரைக்குத் தெற்கே ஒரு காத தூரத்தில் 'ஆவியூர்' எனும் பெயரில் ஓர் ஊர் உள்ள தென்றும், இவ்வாவியின் பெயரால் பல ஊர்கள் வழங்கப்பட்டன என்றும் தமிழறிஞர் மு. இராகவையங்கார் அவர்கள் தனது 'வேளிர் வரலாறு' என்ற நூலில் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு பழைமை வாய்ந்த வேள் ஆவி, ஆவிநன்குடி, பொதினி ஆகியவை பற்றி மேலும் அறிய விரும்புபவர்கள் பதிற்றுப்பத்து, அகநானூறு, புறநானூறு போன்ற சங்க இலக்கியங்களிலும், தமிழறிஞர் ஔவை. .சு. துரைசாமி பிள்ளை அவர்களின் 'சேரர் வரலாறு' மகாவித்துவான் மு. இராகவையங்கார் அவர்களின் வேளிர் வரலாறு' என்ற நூலிலும் காணலாம்.

**நடுவண் அரசிற்கு வேண்டுகோள் !**

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி நடுவண் அரசின் அகழ்வாய்வுத்துறை தனது அகழ்வாய்வினைப் பூம்புகார், குமரிமுனை என நிறுத்திக் கொள்ளாது, கொற்கை, நாகை, பொதினி போன்ற இடங்களிலும் அகழ்வாய்வை முழுமையாக மேற்கொள்ள வேண்டுமென்று' வேண்டுகோள் விடுக்கின்றேன்.

**இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காத தமிழ் வாழ்க !**

# புறநானூற்றில் முதுமக்கள் தாழி

கு. காளீஸ்வரி
சிவகாசி

இலக்கியங்கள் காலத்தைக் காட்டும் கண்ணாடியாகக் கருதப்படுகின்றன. இவை காலத்தைப் பிரதிபலிப்பதோடு மட்டுமல்லாமல், அவ்விலக்கியங்கள் எழுந்த காலச் சூழலில் வாழ்ந்த மக்களின் சீரிய வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், அவர்களின் பண்பாடு, அரசியல் நிலைகளை எடுத்தியம்புகின்றன. எனவே இவ்விலக்கியங்கள் முன்னைய தகவல்களை அள்ளி வழங்கும் கருத்துப் பெட்டகமாகவும் திகழ்கின்றன. அவ்வகையில் சங்க காலத் தமிழ் மக்களின் வாழ்க்கையை எடுத்துரைப்பதில் புறநானூறு முதன்மையான இலக்கியமாகத் திகழ்கின்றது. இக்கட்டுரையின் பொருண்மையானது புறநானூற்றில் காணலாகும் முதுமக்கள் தாழி பற்றிய செய்திகளை ஆய்வதாக அமைகின்றது.

## இனக்குழுச் சமுதாயம்

இனக்குழுச் சமுதாயத்தில் வாழ்ந்த மக்கள் இறந்தோர் உடலை அழிக்க பலவகையான வழிமுறைகளைக் கையாண்டனர்.

*அ. சிதைமூட்டி அழித்தல்*

*ஆ. கழுகுகளும் நரிகளும் தின்று விடும் படியாக உடலை எறிந்து விடுதல்*

*இ. சாதாரணமாகப் புதைத்தல்*

*ஈ. பானையில் அடக்கம் செய்தல் (முதுமக்கள் தாழி)*

மனிதனின் உடலை விட்டு உயிர் நீங்கிய பின்பு, அதனை இறந்த உடல் என்று கருதாமல், உயிர் அழியாமல் இருக்கிறது என்று பழந்தமிழர் நம்பினர். இந்த நம்பிக்கையின் அடிப்படையில் இறந்த உடலுக்கு மதிப்புக் கொடுக்கும் விதமாக முதுமக்கள் தாழி அமைக்கப்பட்டிருக்கலாம் என்று கருத இடமுண்டு. இத்தகைய கருத்தின் அடிப்படையில் அமைந்த சமாதிகளை எகிப்திலும் காணமுடிகின்றது.

பழம்பெரும் எகிப்திய நாகரிகத்தில் ஆவி நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்த சவ அடக்கமுறை இடம்பெற்றுள்ளது. மனிதன் மடிந்தாலும் அவனது ஆவி உடலை நாடி வரும் என்று எகிப்தியர் நம்பினர். இந்த நம்பிக்கையின் அடிப்படையில் மடிந்த மன்னர்களின் உடலை அழிந்து விடாமல் மருந்தூட்டிப் பாதுகாத்தனர். உணவு, உடை, நகை ஆகிய பொருட்களையும் அவர்கள் பயன்பாட்டிற்கென அவர்கள் உடல்களுடன் வைத்தனர். மருந்தூட்டிப் பதப்படுத்தப்பட்ட உடல்களைப் (Mummy) பாதுகாப்பாக வைப்பதற்காகக் கட்டிய பண்டையக் கல்லறைகள் தாம் எகிப்திய பிரமிடுகள் (வெ. கேசவராஜ், நடுகல் வழிபாடு, ப.) ஆகும்.

கம்பராமாயணத்தில் இறந்த தசரதனின் உடலைப் பாதுகாக்க தைலம் பூசிய செய்தி இடம்பெற்றுள்ளது. கேகேய நாட்டிற்குச் சென்றிருந்த பரதன், கோசல நாட்டிற்குத் திரும்பி வரும் வரையில், இறந்த தசரதனின் உடல் கெட்டுப் போகாத படி அதனை எண்ணெய்த் தாழியில் இட்டுப் பாதுகாத்து வைத்த செய்தி இங்கு ஒப்பிடும் வகையில் உள்ளது. (கம்ப. அயோத் : தைலமாட்டுப் படலம். 598)

## முதுமக்கள் தாழி

இறந்தோர் உடலத்தை மண்ணால் செய்யப்பட்ட பெரிய பானைகளில் இட்டு தலைகீழாய்ப் புதைக்கும் வழக்கத்தை பழந்தமிழர் கொண்டிருந்தனர். அவர்கள் முதுமக்கள் தாழியைப் புதைக்கும் பெரிய குழியில் பாதியை மண்ணால் நிரப்பி, அதற்கு மேல் உணவுக்குப் பயன்படும் தானியங்களைப் பரப்பினர். இதனை, மண்ணால் மூடி இறந்தோர் பயன்படுத்திய கற்கருவிகளை அத்தாழியின் அருகில் போட்டுப் புதைத்தனர். இறந்த உடலோடு தானியங்களும், கருவிகளும் புதைக்கப்படுவதன் நோக்கத்தை ஆராய்கையில் இறப்பிற்குப் பின்பும் உயிருக்கு அழிவில்லை என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே இவ்வாறு செய்திருக்கக் கூடும் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இறுதியாக முதுமக்கள் தாழியை மண்ணால் ஆகிய மூடியினால் மூடுவதும் உண்டு. இத்தாழிகளை ஈமத்தாழி, ஈமப்பேழை, முதுமக்கள் சாடி, மட்சாடி, மிடா என்றெல்லாம் வழங்குவர்.

## ஈமப் பேழைகள்

ஈமப் பேழைகள் முதுமக்கள் தாழியினின்று வேறுபட்ட வடிவம் கொண்டவை. உலோக கால மக்களில் சிலர் இறந்தோரைப் புதைக்க

சுடுமண் தாழிகளையும், கால்களுடன் கூடிய தாழிகளையும் பயன்படுத்தினர். இறந்தோரைப் படுக்கை நிலையில் அடக்கம் செய்வதற்கேற்ப நீண்ட தொட்டிகளைப் போன்ற பேழைகளைத் தயார் செய்து, அதனை ஈமக் கலமாகப் பயன்படுத்துதலே ஈமப்பேழை ஆகும். புதைகுழிகளில் பயன்படுத்தப்பட்ட கலங்களில் பொதுவாக நான்கு கால்களே இருக்கும். ஈமப்பேழைகளில் அதன் நீளத்திற்கு ஏற்ப பல கால்கள் இருக்கும். முதுமக்கள் தாழிகளைத் தவிர்த்து இத்தகைய ஈமப் பேழைகளிலும் இறந்தோர் உடலை அடக்கம் செய்ததை அகழ்வாய்வுகள் மூலம் அறியமுடிகிறது.

## முதுமக்கள் தாழி கிடைக்குமிடங்கள்

புதுக்கோட்டை மாவட்டத்திலும், கோவையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பழந்தமிழ் மக்களின் சமாதி என்று கருதத்தக்க இடங்களும் பொருள்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்தச் சமாதிகளில் மண்ணால் செய்யப்பட்ட பெரிய தாழிகள் காணப்படுகின்றன. (ம.ரா.போ. குருசாமி, பழந்தமிழகம், ப. 156)

செங்கல்பட்டு மாவட்டத்திலும், ஆந்திராவிலும் 12 கால்களுடன் கூடிய ஈமப்பேழைகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. என்பது குறிப்பிடத்தக்கது. பொதுவாக ஈமப்பேழைகள் சுடுமண்ணால் செய்யப்படுவன. சில இடங்களில் கல்லாலான ஈமப் பேழைகளும் அகழ்வாராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஈமப்பேழைகள் பொதுவாக விலங்குருவில் காணப்படுகின்றன. பெல்லாரியில் யானை உருவத்திலும் ஈமப் பேழைகள் காணப்படுகின்றன. கடப்பாவில் ஆட்டுக்கடா உருவத்தில் ஈமப்பேழைகளைக் காணமுடிகின்றது. ஈமப் பேழைகளின் மூடிகளும் பலவிதமான விலங்குருவங்களில் செய்யப்பட்டுள்ளன. (வாழ்வியற் களஞ்சியம், தொகுதி - 4, ப. 636)

தமிழகத்திலும், ஆந்திர மாநிலத்தில் பெருமளவு முதுமக்கள் தாழிகளும், ஈமப்பேழைகளும் அகழ்வாய்வு மூலம் கண்டறியப்பட்டுள்ளன. இப்பகுதிகள் யாவும் பழந்தமிழ் மக்கள் வாழ்ந்த இடங்களாகும்.

## கவிசெந்தாழி

பழந்தமிழர் இறந்தோரை எரித்தலோ அன்றிப் புதைத்தலோ செய்வர். புதைக்கப்பட வேண்டிய பிணங்களைத் தாழியிலிட்டுப்

புதைப்பர். பிணங்களை ஆண் பருந்துகளும் பொகுவல்களும் அண்டங் காக்கைகளும் கோட்டான்களும் ஆகிய பறவையினங்களும் விலங்கினங்களும் பற்றியிழுத்தலாகாது என்று கருதி தாழிகளைக் கவிழ்த்து மண்ணில் புதைப்பர். எனவே இது 'கவிசெந்தாழி' எனக் கூறப்படுகிறது. (புறம். 238) இதனைக் 'கவிக்கும் கண் அகன் தாழி' என்று புறநானூற்றின் 364வது பாடல் குறிப்பிடுகின்றது. இதே கருத்தமைந்த பாடல் நற்றிணை 271வது பாடலில் காணப்படுகின்றது.

## பெரியதாழி

இறந்தவர் பெருமையை விளக்கும் விதமாக இடம் அகலமான பெரிய தாழி செய்யப்படுவதுண்டு. அது போல கணவனுடன் மனைவி இறந்து விட்டால் இருவரையும் ஒரே தாழியில் வைத்து அடக்கம் செய்யும் விதமாக இடம் அகலமான பெரிய தாழி செய்யப்படுவதுண்டு.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் வானில் விளங்குகின்ற சூரியனுக்கு நிகரான பெருமை பெற்றவன். இத்தகு புகழ் பெற்ற சோழன் இறந்து விட்டான். அவனது பெருமையை விளக்கும் விதமாக ஐயூர் முடவனார் என்ற புலவர் சிறப்பு பொருந்திய மிகப்பெரிய தாழியை குயவனாலும் செய்ய இயலாது என்று குறிப்பிடுகின்றார் (புறம். 228)

கணவன் இறந்த பின்பு மனைவி அவனுடன் தீப்புகுதலும் கைம்மை நோன்பு மேற்கொள்ளுதலும் பண்டைய வழக்கத்தில் இருந்தமையைச் சங்கப் பாடல்கள் வழி அறியமுடிகின்றது.

பெண்ணொருத்தி தன் கணவனுடன் சுரத்தின் வழியாகச் செல்கையில் போர் ஏற்பட்டு விடுகின்றது. அப்போரில் அவள் கணவன் விழுப்புண்பட்டு இறந்த படுகிறான். கணவனுடன் அப்பெண் தீப்புகவும் விரும்பவில்லை. கைம்மை நோன்பு நோற்கவும் விரும்பவில்லை. ஆனால் தலைவனோடு இறக்க விரும்புகிறாள். தன்னையும் கணவனோடு அடக்கத்தக்க இடம் அகலமான பெரிய தாழியை அருள் கூர்ந்து செய்ய வேண்டும் என இறப்பதற்கு முன்பே குயவனிடம் வேண்டுவதாக புறநானூற்றின் 256வது பாடல் விளக்குகின்றது.

### முதுமக்கள் சாடி

பண்டைக் காலத்தில் வயதால் மிகுந்த முதியவர்கள் துன்பமின்றி இருப்பதற்காகவும் சமணர்கள் தவம் செய்வதற்காகவும் உபயோகப்படுத்தப்பட்டு வந்த தாழிகள் முதுமக்கள் சாடி என வழங்கப்பட்டன. முதுமை அடைந்தவர்கள் இயற்கையாக மரணமடைந்த பின் அவர்களை வைத்துப் பேணிய முதுமக்கள் சாடிகளே அவர்களைப் புதைக்கத் தாழிகளாகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

கழுத்து வரைக்கும் புதைத்துக் கொண்டு தவம் செய்யும் சமணர்கள் பெருந்தாழிக்குள் அமர்ந்து கடுந்தவம் செய்து உயிர் நீப்பர். உயிர் நீத்த பின் அத்தாழிகளே அவர்களைப் புதைக்கும் தாழிகளாகப் பயன்படுத்தப்பட்டன.

இதனை,

*"தாழியிற் பிணங்களும் தலைப்படா வெறுந்தவப்*
*பாழியிற் பிணங்களுந் துளப்பெழப் படுத்தியே"*

என்ற தக்கையாகப் பரணியின் 376வது பாடல் குறிப்பிடுகின்றது.

பெருங்கற் புதைவுக் காலத்தலிருந்து தமக்கு முற்பட்ட பண்டைத் தமிழரிடம் வழங்கி வந்த இத்தாழிப் பழக்கத்தை பிற்காலத்தில் உருவாகிய சமண சமயத்தைச் சார்ந்தோர் கைக் கொண்டனர் என அறிஞர் கருதுவது இங்கு எண்ணத்தக்கது (வெ. கேசவராஜ், நடுகல் வழிபாடு, ப.)

### நிறைவாக

முதுமக்கள் தாழி என்பது பழந்தமிழ் மக்களிடம் தொடங்கி இன்றைக்கு இறந்தோர்களை அடக்கம் செய்யும் சவப்பெட்டியாக (கிறித்தவ சமயம்) மாற்றம் பெற்றிருப்பதைக் கண்கூடாகக் காணமுடிகின்றது.

முதுமக்கள் தாழிகளைப் புகழ்பெற்ற மன்னர்களுக்காக மட்டுமல்லாமல் சாதாரண குடிமக்களை அடக்கம் செய்வதற்கும் பழந்தமிழர் பயன்படுத்தியிருந்தனர் என்பதை புறநானூற்றின் வாயிலாக அறியமுடிகின்றது.

# கீழ்க்கணக்கு நூல்களில்
# அறமும் கல்வியும்

*ப. கதிரவன்*
திட்டக்குடி.

நமது தமிழ்மொழியில் பண்டைக்காலம் முதல் தற்காலம் வரை பல்வேறு இலக்கியங்கள் தோன்றியுள்ளன. சான்றோர்கள் பழங்காலத்தில் சங்கங்கள் அமைத்துத் தமிழைப் போற்றி வளர்த்துள்ளனர். கற்றறிந்த புலவர்களையும், சான்றோர்களையும் போற்றிப் பாராட்டுவது பண்டைத் தமிழ் அரசர்களின் ப்ணியாக இருந்தது. அரசர்களும் புலவர்களைப் பெரிதும் போற்றினர் என்பதைச் சங்கப் பாடல்கள் நமக்கு உணர்த்துகின்றன. சங்ககால இலக்கியங்களில் அடி வரையறை மிகுந்தும், ஆசிரியத்தின் செல்வாக்கு சிறந்தும், காதலும், வீரமும் பாடு பொருளாகத் திகழ்ந்தும் இருந்தன. சங்கம் மருவிய காலத்தில் நீதி இலக்கியங்கள் மிகுதியாகத் தோன்றியமையால் நீதி நூற்காலம் என்றும் அழைக்கப்பட்டது. இக்காலத்தில் தோன்றியவையே பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் ஆகும்.

*"அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி*
*அறம் பொருளின்பம் அடுக்கி யவ்வகைத்*
*திறம்பட வுரைப்பது கீழ்க்கணக்காகும்"*

என்பது பன்னிருபாட்டியல் சூத்திரமாகும். எனவே குறைந்த அடிகளையுடைய செய்யுட்களையுடையதாய் வெண்பா யாப்பினால் இயன்று அறம்-பொருள்-இன்பம் எனும் மூன்று உறுதிப் பொருள்களையும் கூறுவனவற்றைக் கீழ்க்கணக்கு நூல்கள் என்று வகைப்படுத்தினர். பதினெண்கீழ்க்கணக்கு நூல்களாவன:

*"நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்*
*பால்கடுகங் கோவை பழமொழி மாமூலம்*
*இன்னிலைய காஞ்சியோடு ஏலாதி என்பவே*
*கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு"*

இப்பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் 11 நூல்கள் அறநூல்கள் ஆகும். அகப்பொருள் நூல்கள் 6, புறப்பொருள் நூல் 1 ஆகும்.

### அறக்கருத்துக்கள்

தமிழ்ப்புலவர்கள் காதலையும், வீரத்தையும் இரு கண்களாகக் கருதினார்கள். அறத்தை உயிராக மதித்தார்கள். சங்கப் புலவர்கள் தாம் பாடிய பாடல்களின் அறக்கருத்துகளை வாய்ப்பு நேரும் போதெல்லாம் வலியுறுத்தினார்கள். திருக்குறள் மூலமாக, அறம் என்பது சிறப்பையும் அளிக்கும் ; செல்வத்தையும் அளிக்கும் ; ஆகையால் ஒருவருடைய வாழ்க்கைக்கு அறத்தைவிட நன்மையானது வேறில்லை என்பதை நாம் அறியமுடிகிறது. ஒருவன் வாழ்நாளில் முயற்சி மேற்கொண்டு செய்யத் தக்கது அறமே ஆகும். செய்யாமல் காத்துக் கொள்ளத் தக்கது பழியே என திருவள்ளுவர் கூறுகிறார்.

இதனை

*''செயற்பால தோரும் அறனே ஒருவற்கு*
*உயற்பால தோரும் பழி''*

என்ற குறட்பாவின் மூலம் அறியலாம். மேலும் ஒருவன் தன் மனத்தில் குற்றம் இல்லாதவனாக இருக்க வேண்டும். அறம் அவ்வளவே; மனத்தூய்மை இல்லாத மற்றவை ஆரவாரத் தன்மையுடையவை என்பதை,

*''ம னத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்*
*ஆகுல நீர பிற''*

என விளக்குகிறார்.

பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் ஆகிய இந்த நான்கு குற்றங்களுக்கும் இடம் கொடுக்காமல் அவற்றைக் கடிந்து ஒழுகியதே அறமாகும் என வள்ளுவர் மேலும் கூறுகிறார். தனது நூலில் '' அறன் வலியுறுத்தல்'' என்ற அதிகாரத்தின் வாயிலாக பல்வேறு அறம் பற்றிய கருத்துக்களை எடுத்தியம்புகிறார். அறம் செய்ய வேண்டிய நாள்கள் பற்றி ஆசாரக் கோவை பின்வருமாறு கூறுகிறது.

*'கலியாணம் தேவர் பிதிர்விழா வேள்வியென்ற*

*ஐவகை நாளும் இகழா தறஞ்செய்க*

*பெய்க விருந்திற்கும் கூழ்'*

தான் செய்யும் கல்யாண நாளிலும், தேவரின் சிறப்பு நாளிலும், விழா நாட்களிலும், வேள்வி இயற்றும் நாளிலும் என்ற இந்த ஐவகைப் பட்ட காலத்தும் தப்பாது ஈகை அறம் செய்க; விருந்தினர்க்குச் சோறு இடுக என்று பொருவாயின்முள்ளியார் அறம் செய்யவேண்டிய நாள்கள் பற்றிக் கூறுகிறார்.

ஒவ்வோருவரும் வாழ்க்கையில் இனிமையுடையவராய் இருக்கவே விரும்புவர். அவ்வாறு வாழ்க்கையை இனிமைப் படுத்திக் கொள்ள முதலில் அறம் செய்யக் கற்றுக் கொள்ளவேண்டும். 'அறம் செய விரும்பு' என்று ஆத்திச்சூடி கூறுகிறது. தனக்கு வரும் வருவாயின் அளவை அறிந்து கொடுப்பது இனிதாகும். அறத்தைச் செய்து பாவங்களை நீக்குதல் இனிதாகும். இதனையே,

*''அறம்புரிந்து அல்லவை நீக்கல் இனிதே''*

என்று இனியவை நாற்பது கூறுகிறது. அவ்வாறு அறமுடைய உள்ளத்தை உடையவர் சொல்லும் கடுமையான சொல்லும் துன்பம் விளைவிக்கும் என்பதை

*''அறமனத்தார் கூறுங் கடுமொழியு மின்னா''*

என இன்னா நாற்பது எடுத்துரைக்கிறது.

மற்றவர்க்குப் பொருளைத் தானமாகக் கொடுக்கும் பெருந்தகுதியும், மானமுடையவரின் குற்றம் நீங்கிய ஒழுக்கமும், தெளியப்பல பொருள்களின் செல்லுதல் நீங்கிய நினைவும் என்ற இம்மூன்றும் அறப்பயனை நீங்காதபடி கட்டும் கயிறு ஆகும் என்பதை,

*''தானம் கொடுக்கும் தகைமையும் மானத்தார்*
*குற்றம் கடிந்த ஒழுக்கமும் - தெற்றெனப்*
*பல்பொருள் நீங்கிய சிந்தையும் இம்மூன்றும்*
*நல்வினை யார்க்கும் கயிறு''*

என்ற திரிகடுகப் பாடல் மூலம் நம்மால் அறியமுடிகிறது.

எள்ளளவு ஆயினும் தான் மற்றவரிடம் இரவாமல் மற்றவர்க்குத் தான் ஈதல் எல்லாவகையிலும் இனிதாகும் என்பதை,

*"என்துணை யானும் இரவாது தான்ஈதல்*

*எத்துணையும் ஆற்ற இனிது"*

என இனியவை நாற்பது கூறுகிறது.

**கல்வி**

ஒருவருக்கு அறிவைக் கொடுப்பது ; அறியாமையை அகற்றுவது; உள்ளத்தைப் பண்படுத்தக் கூடியது; மனித நேயத்துடன் வாழப் பயிற்றுவிப்பது; பண்பாட்டுடன் நடக்கக் கற்பிப்பது; பகுத்தறியும் பாங்கை வளர்ப்பது கல்வியே ஆகும். அத்தகைய கல்வியே வாழ்க்கைக்கு ஒளி என்பதை,

*மனைக்கு விளக்கம் மடவார் மடவார்*

*தமக்குத் தகைசால் புதல்வர் மனக்கினிய*

*காதற் புதல்வர்க்குக் கல்வியே கல்விக்கும்*

*ஓதிற் புகழ்சால் உணர்வு*

என நான்மணிக்கடிகைக் கூறுகிறது. அதாவது வீட்டுக்கு ஒளி பெண்டிர். அப்பெண்டிர்க்கு நல்லியல்புகள் நிறைந்த மக்கள் ஒளி ஆவர். பெற்றோர் உள்ளத்துக்கு இனிய அன்புப் புதல்வர்க்குக் கல்வி அறிவே ஒளியாகும். அந்தக் கல்வி அறிவிற்கும் கூறுமிடத்துப் புகழ் நிலைத்த மெய் உணர்வே ஒளியாகும் என்பது இப்பாடல் கருத்தாகும்.

"இளமையில் கல்" என்பது பழமொழி. கற்பதற்குரிய காலம் இளமைக் காலம் ஆகும். அக்காலத்தில் கற்க வேண்டும். அதை விடுத்து முதுமையில் கற்று வல்லவன் ஆக முடியாது என்பதைப் பழமொழி நானூறு,

*"சுரம்போக்கி உலகு கொண்டார் இல்லையே யில்லை*

*மரம் போக்கிக்கூலி கொண்டார்"*

என்ற பழமொழி மூலம் நாம் அறியமுடிகிறது. கற்கத் தகுந்த நூல்களைக் குற்றமறக் கற்க வேண்டும். அவ்வாறு கற்ற பிறகு, கற்றக் கல்விக்குத் தக்கவாறு நெறியில் நிற்க வேண்டும் என்பதை,

*"கற்க கசடறக் கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக"*

என்ற குறட்பா கல்வி பற்றி கூறுகிறது. கற்றவனுக்குத் தன் நாடும் ஊரும் போலவே வேறு எதுவாயினும் நாடாகும், ஊராகும் என்பதை "யாதானும் நாடாமல் ஊராமால் என்னொருவன்" என்று வள்ளுவர் கூறுகிறார். இதைப் போலவே கற்றவர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பதை

*"ஆற்றவும் கற்றார் அறிவுடையார் அஃதுடையார்*
*நாற்றிசையும் செல்லாத நாடில்லை - அந்நாடு*
*வேற்றுநா டாகதமவேயாம் ஆயினால்*
*ஆற்றுணா வேண்டுவ தில்"*

என்ற பாடல் மூலம் பழமொழி நானூறு எடுத்துரைக்கின்றது. இதிலிருந்து கல்வியின் சிறப்பை நம்மால் அறிய முடிகிறது.

## முடிவுரை

*கல்லாது போகியநாளும் பெரியவர்கள்*
*செல்லாது வைகிய வைகலும் - ஒல்வ*
*கொடாஅ தொழிந்த பகலும் உரைப்பின்*
*படாஅவாம் பண்புடையார் கண்.*

கற்க வேண்டிய நூல்களைக் கற்காமல் வீணாகக் கழிந்த நாளும், கேள்வியின் காரணமாகப் பெரியோரிடத்தில் செல்லாமல் கழிந்த நாளும் இயன்ற அளவு பொருளை இரப்பார்க்குக் கொடாது கழிந்த நாளும் பண்புடையாரிடத்தில் உண்டாகாது என்று நாலடியார் கூறுகிறது. ஆகவே கல்வியோடும், அறச்சிந்தனையோடும் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். அப்படி வாழ்ந்தால் அனைவருடைய வாழ்க்கையும் வளம் பெறும் என்பது திண்ணம்.

# நாலடியார், திருக்குறள்
## நவிலும் நற்சிந்தனைகள்

*திருமதி. ப. தமிழ்க்கனி*
திட்டக்குடி

பத்துப்பாட்டும், எட்டுத் தொகையும் ''பதினெண் மேற்கணக்கு'' என்று கூறப்படும். பின்பு சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய பதினெட்டு நூல்கள், ''பதினெண் கீழ்க்கணக்கு'' என்னும் பெயர் பெற்றன. இவற்றுள் திருக்குறள், நாலடியார் ஆகிய இரண்டும் தமிழ் இலக்கியத்தில் ஒரு முக்கிய இடத்தைப் பிடித்துள்ளன. இவ்விரண்டு நூல்களும் வாழ்க்கைக்குத் தேவையான வளமான கருத்துக்களை வாரி வழங்கியுள்ளன. நம் முன்னோர்கள்,

*''ஆலும் வேலும் பல்லுக்குறுதி*
*நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி''*

என்று சொல்லுவர். இதில் நாலும், இரண்டும் என்பது முறையே நாலடியாரையும், திருக்குறளையும் குறிக்கும்.

**அன்பு**

இவ்வுலகில் அன்பு என்பது அஹிம்சை வழி என்று கூறப்படுகின்றது. ஏனென்றால் அன்பினால் அனைவரிடத்திலும் நன்மதிப்புப் பெற முடியும். அன்புக்கு அடிபணியாதவர் எவருமிலர். இந்த அன்பு பற்றி திருக்குறளில் அன்புடைமை என்ற அதிகாரம் வாயிலாக அதன் சிறப்புகளைக் கூறியுள்ளார் வள்ளுவர்.

அன்பு இல்லாதவர் எல்லாப் பொருளையும் தமக்கே உரிமையாகக் கொண்டு வாழ்வர்; அன்பு உடையவர்கள் தமது உடம்பையும் பிறர்க்கு உரிமையாக்கி வாழ்வர் என்பதை,

*''அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு*
*என்போடு இயைந்த தொடர்பு''*

என்று கூறுகிறார். அதாவது அன்பு பிறரிடம் விருப்பம் உடையவராக வாழும் தன்மையைத் தரும்; அஃது எல்லோரிடத்திலும் நட்பு என்று

சொல்லப்படும் அளவற்ற சிறப்பைத் தரும் என்று நட்பு உண்டாவதற்குக் காரணம் அன்பு என்று கூறுகிறார். மேலும் ஒருவனுடைய நல்ல பண்புகளுக்கு இடையில் அன்பற்ற தன்மை காணப்பட்டால் அவனை அவனுடைய குடிப்பிறப்புப் பற்றி ஐயப்பட நேரிடும் என,

*''நலத்தின் நாரின்மை தோன்றின் அவனைக்*
*குலத்தின்கண் ஐயப் படும்''*

என்ற குறள் மூலம் அன்பில்லாதவரின் நிலைப்பற்றி வள்ளுவர் கூறியுள்ளார்.

**அடக்கம்**

அடக்கம் என்ற நற்குணம் ஒருவனுக்கு யாரும் வணங்கும் படியான தெய்வத் தன்மையை உண்டாக்கும். அடங்காமை என்ற கெட்டகுணம் ஒருவனை அவன் இருப்பதைக் கூட யாரும் அறியமுடியாத அந்தகாரமான இருளில் தள்ளிவிடும் என்பதை,

*''அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை*
*ஆரிருள் உய்த்து விடும்''*

என அடக்கத்தின் மேன்மையை வள்ளுவர் கூறுகிறார்.

அறிய வேண்டிய நன்மை, தீமைகளை அறிந்து பாவங்களுக்கு அஞ்சி, செய்வதை உலகம் மகிழுமாறு செய்து, அறநெறியில் வந்த பொருளால் மகிழ்ந்து வாழும் இயல்புடையவர் எக்காலத்தும் துன்புற்று வாழ்தல் இல்லை. அதாவது,

*''அறிவது அறிந்தடங்கி அஞ்சி*
*உறுவது உலகுவப்பச் செய்து பெறுவதனால்*
*இன்புற்று வாழும் இயல்பினார் எஞ்ஞான்றும்*
*துன்புற்று வாழ்தல் அரிது''*

என்ற நாலடியார் பாடல் மூலம் நன்மை, தீமைகளை அறிந்து தீமைக்கு அஞ்சி உலகம் மகிழ வாழும் அடக்கமுடையவர் துன்புறுதல் இல்லை என்ற கருத்து தெளிவாகிறது.

**ஈகை**

வறியவர்க்கு ஒரு பொருளைக் கொடுப்பதே ஈகை எனப்படுவதாகும். அதாவது,

*"வறியவர்க்கு ஒன்று ஈவதேஈகை மற்றெல்லாம்*

*குறிப்பெதிர்ப்பை நீரது உடைந்து"*

என்கிறது குறள். வறியவர்க்கு ஒரு பொருளைக் கொடுப்பதே ஈகை ஆகும். மற்றவர்க்கு கொடுப்பதெல்லாம் பயனை எதிர்பார்த்துக் கொடுக்கும் தன்மை உடையது என்று வள்ளுவர் கூறுகிறார். மேலும்,

*"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்*

*பெற்றான் பொருள்வைப் புழி"*

என்கிறது திருக்குறள். அதாவது ஏழைகளின் கடும்பசியைத் தீர்த்து வைக்கிற அந்தக்காரியம் ஒருவன் பின்னால் தனக்கு வேண்டுமே என்று செல்வத்தை ஓரிடத்தில் சேமித்து வைப்பதைப் போன்றதாகும் என குறள் கூறுகிறது.

பொருள் இல்லாத போதும் தம்மால் இயன்ற அளவு பொருள் உள்ளது போல் மகிழ்ந்து இயல்பாகக் கொடுக்கும் குணமுள்ள மக்களுக்கு மறுமை உலகக் கதவுகள் எப்போதும் திறந்தே இருக்கும் என்பதை,

*"இல்லா இடத்தும் இயைந்த அளவினால்*

*உள்ளஇடம் போல் பெரிதுவந்து மெல்லிக்*

*கொடையொரு பட்ட குணனுடைய மாந்தர்க்கு*

*அடையாளம் ஆண்டைக் கதவு"*

என ஈகைக் குறித்து நாலடியார் கூறுகிறது.

மேலும் வறுமையும் பிறருக்கு ஒன்றும் தரமுடியாவிட்டாலும் பிறரிடம் பிச்சை கேட்காமல் இருத்தல் நன்று என்று நாலடியார் கூறுகிறது.

*"மறுமையும் இம்மையும் நோக்கி ஒருவர்க்கு*

*உறுமா றியைவ கொடுத்தல் - வறுமையால்*

*ஈதல் இசையா தெனினும் இரவாமை*

*ஈதல் இரட்டி யுறும்"*

அதாவது மறுமையில் துறக்க வாழ்வும் இம்மையில் புகழும் நோக்கி ஏற்ற வகையில் முடிந்த அளவு கொடுக்க வேண்டும். வறுமை காரணமாக அவ்வாறு தர முடியாவிட்டாலும், பிறரிடம் சென்று பிச்சை எடுக்காமல் இருத்தல், கொடுப்பதை விட இரண்டு மடங்கு நல்லது என்று ஈகை பற்றி நாலடியார் கூறுகிறது.

## மேன்மக்கள் இயல்புகள்

உண்மையான உயர்குடியில் பிறந்தவர்க்கு முக மலர்ச்சி, ஈகை, இனிய சொல், பிறரை இகழ்ந்து கூறாமை ஆகிய நான்கு நல்ல பண்புகள் இருக்கும். இதனை,

*"நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்*
*வகை எனப வாய்மைக் குடிக்கு"*

என்ற குறள் மூலம் குடிப்பிறந்தார் பண்புகள் பற்றி வள்ளுவர் கூறுகின்றார். வறுமையிலும் குடிப்பிறந்தார் தம் கடமைகளைச் செய்யும் ஆற்றலுடையராவர் என்று குடிப்பிறந்தார் பெருமை பற்றி, நாலடியார் கூறுகின்றது.

***"செல்லா விடத்துங் குடிப்பிறந்தார் செய்வன***
***செல்லிடத்துஞ் செய்யார் சிறியவர்; - புல்வாய்***
***பருமம் பொறுப்பினும் பாய்பரி மாபோல்***
***பொருமுரண் ஆற்றுதல் இன்று"***

அதாவது மான், சேணத்தைத் தாங்கி இருந்தாலும், பாயும் குதிரை போலத் தாக்கிப் போரிட இயலாது. அதுபோல, வறுமைக் காலத்திலும் உயர்குடிப் பிறந்தவர்கள் செய்யும் நல்ல செயல்களைக் கீழோர் செல்வக் காலத்திலும் செய்யமாட்டார்கள் என்பது இப்பாடலின் கருத்தாகும். மேன்மக்கள் என்பவர்கள் குணத்தால் மேம்பட்டவர்கள் ஆவர். அந்த மேன்மக்களின் இயல்புகள் பற்றி நாலடியார்,

***"இசையும் எனினும் இசையா தெனினும்***
***வசைதீர எண்ணுபவர் சான்றோர்; - விசையின்***
***நரிமா உளங்கிழித்த அம்பினின் தீதோ***
***அரிமா பிழைப்பெய்த கோல்?"***

என்று கூறுகிறது. அதாவது அரிய காரியங்களை எண்ணிச் செய்வது மேன்மக்கள் இயல்பு ஆகும். மேன்மக்கள் வறுமையினால் கூட தவறிய வழிகளில் செல்லமாட்டார்கள் என்பது இப்பாடலின் கருத்தாகும்.

## முடிவுரை

திருக்குறள், நாலடியார் ஆகிய இரண்டு நூல்களிலுமே நாம் கற்று, இன்புற்று அதன்வழி நடந்தால் வாழ்க்கையில் முன்னேற முடியும்; எல்லா வளங்களையும் பெற்றுச் சிறப்புடன் வாழ முடியும். எனவே நாலடியும், இரண்டடியும் நம் வாழ்வின் வெற்றிக்கு அடிப்படிகள் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

# ஆதவனின் சிறுகதைப் பின்புலம்

*த. அண்ணாதுரை*
திருவாரூர்

ஒரு நிகழ்ச்சியை அல்லது ஒரு பொருளின் இயக்கத்தைத் தெளிவாகவும் உடனடியாகவும் விளக்கிக் கொள்வதற்குத் துணையாக அமைக்கப்படும் புறத் தகவல்களை, பின்புலம் அல்லது பின்னணி எனக் கூறலாம்.

படைப்புகளில் கதை, கதைப்பின்னல், பாத்திரப்படைப்பு போன்றவை பின்புலத்தினைச் சார்ந்து அமைகின்றன. இலக்கியத்தில் கருத்தை, கதை நிகழ்வினைத் தெளிவாகப் புரிந்துகொள்வதற்குப் பின்புலம், பின்னணி போன்ற சொற்களின் ஆளுமை தேவையாகின்றது. பொருளின் அழகியலையும், தன்மையினையும், இலக்கியத்தின் முதன்மைக் கருத்தையும், துணைமைச் சிந்தையாக்கங்களையும் கால, இட, பரிமாணத்தோடு அணுகுவதற்குப் பின்புலங்கள் தேவையாகின்றன. படைப்புகளின் செம்மையாக்கத்திற்கும், உணர்ச்சி நிலைக்கும் பின்புலங்கள் காரணமாகின்றன. பின்புலத்தை இடம், காலம், சமூகம் என்னும் முப்பரிணாமக் கருத்துக்களில் அடக்குவர். கதை நிகழ்வுகள் நிகழும் இடத்தையும் காலத்தையும் வரலாற்று நிலையோடும், சமூகத் தளங்களான அரசியல், பொருளாதார, கலை, பண்பாடு, மதம், இனக்கோட்பாடுகள் முதலானவற்றைச் சூழ்நிலையோடும் கொண்டு சமுதாயத்தில் பின்புலங்கள் இயங்கும்.

ஆதவன் படைப்புகளின் பின்புலங்களை இடம், பொருள், காலம் சார்ந்த நிலைகளில் வகைப்படுத்தலாம். இடம்சார்ந்த நிலைகளில் தொடர்வண்டி நிலையம், அலுவலகம், பேருந்து நிறுத்தம், கடைவீதி போன்றவை கதைக்கு முதன்மையான பின்புலங்களாக அமைகின்றன. ஆதவனின் 'கனவுக் குமிழிகள்' என்னும் கதையில் உணவு விடுதி, புகைப்பட நிலையம், 'ஒரு தற்கொலை' என்னும் கதையில் தேநீர் நிலையம், மதுக்கடை, 'இல்லாதது' என்னும் கதையில் தொடர்வண்டி நிலையம், அலுவலக வரவேற்பறை போன்றவை கதைக்களங்களாகப் படைப்புகளில் இடம் பெறுகின்றன. பொருளினைப் பின்புலமாக வைத்து

'இன்னொரு திங்கள்கிழமை' என்னும் கதையில் பிரஷ், சோப்பு, ரேசர் போன்றவற்றையே பின்னணியாக அமைத்துக் கொண்டு கதையை நிகழ்த்திச் சென்றுள்ளார்.

ஆதவன் படைப்புகளில் 'புல்லாங்குழல்', 'தாஜ்மகால்', 'வீணை, விரல், மனம்' போன்றவை படைப்புப் பின்புலங்களாக அமைகின்றன. காலம் சார்ந்த நிகழ்வுகள் அனைத்துப் படைப்புகளிலும் காரணிகளாக அமைகின்றன. காலை, நண்பகல், மாலை, இரவு, நள்ளிரவு போன்ற பொழுதுகள் பொதுவான படைப்புப் பின்புலமாக விளங்குகின்றன.

## குடும்பம்

'குடும்பம் சமுதாயத்தின் அங்கமாகவும் ஒட்டுமொத்த சமுதாயத்தின் வளர்ச்சியாகவும் மக்களோடு பின்னிப் பிணைந்துள்ள நிறுவனமாகும். இரத்த உறவினால் இணைக்கப்பட்ட மக்கள் கூட்டம் என்றும் பொதுவான பண்பாடுகளைத் தம் குழுவினரிடையே உருவாக்கிப் பாதுகாத்து வரும் அமைப்பு என்பர்.

சமூகத்தை மாற்றும் வல்லமை குடும்பத்திற்கு உண்டு எனலாம். ஆகவே ஒரு சமுதாயத்தை வரையறை செய்வதிலும் வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதிலும் குடும்பமே பெரும்பங்கு பெறுகிறது. குடும்பத்தில் நன்முறையில் வளர்க்கப்படுகின்ற குழந்தைகளே வருங்காலச் சமுதாயத்தின் ஆணிவேராக ஆதவன் கதைகளில் நிலைநிறுத்தப்படுகின்றனர்.

குடும்பம் என்பது அடிப்படை உறவுடைய கணவன் மனைவி பிள்ளைகளைக் கொண்ட சிறிய அளவுடைய ஒன்றாகும். பரந்துபட்ட நிலையில் ஒருங்கிணைந்து வாழும் உறவினர்களையும் தத்தெடுக்கப்பட்ட நபர்களையும் குறிப்பதாகும் என்னும் சான்றும் குறிக்கத்தக்கது. குடும்பத்தினைத் தனிக்குடும்பம், கூட்டுக் குடும்பம் உறுப்பினர்களாகத் தாய், தந்தை, அண்ணன், தம்பி என்று வகைப்படுத்த முடியும்.

''குடும்பம் என்பது ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே பாலுணர்வு ஆசைகளைத் தீர்த்துக்கொள்வதற்காக ஏற்பட்ட தற்காலிகக் கூட்டுமுறையாகும். அதன் பணி பெற்றோர், குழந்தைகள் ஆகியோரின் உறுதியான கூட்டுறவை அமைத்துக் குழந்தைகளைச் சமுதாயம் சார்ந்த நிலையில் வளர்ப்பதே ஆகும்.

குடும்பம் மனிதனைக் கட்டுப்படுத்தி விலங்கிடமிருந்து பிரித்துக் காட்டுவதாகும். பகுத்தறிவு அடிப்படையிலும் உயர்திணை அடிப்படையிலும் நன்மதிப்பைப் பெற்றுத் தருகிறது. குடும்பம், உறவுநிலைகளின் புனிதத்தை உணரச் செய்கிறது. 'இரத்த உறவின் அடிப்படையில் ஏற்பட்ட இரு தலைமுறையினரின் சிறிய சமுதாய நிறுவனமே குடும்பமாகும் எனவும் கருத்துரைப்பர்.

ஆதவன் படைப்புகளில் குடும்பத்தின் உறவுநிலைக்குப் பெரிதும் முதன்மை கொடுக்கப்படுகிறது. குழந்தை பெறுதல், பராமரித்தல், குழந்தைகளைப் பல்துறைத் திறமை உடையவர்களாக மாற்றுதல் போன்ற முதன்மைச் செயல்பாட்டிற்கு இப்படைப்பு பெரிதும் உறுதுணையாக உள்ளது.

ஆதவன் சிறுகதைப் படைப்புகளில் தந்தை, தாய் ஆகிய இருவருக்குமே சமமான தலைமைப் பொறுப்பு உள்ளது. சமுதாயத்தில் உள்ள பல்வேறு வகையான குடும்ப அமைப்புகளும் உறவுமுறைகளும் குறைவின்றித் தெளிவாகப் படைக்கப் பட்டுள்ளன. வழக்கம் போலத் தனிக்குடும்ப, கூட்டுக் குடும்ப அமைப்பை ஆதவன் என்னும் சிறுகதைப் படைப்பாளரும் பதிவு செய்துள்ளார்.

தனிக்குடும்ப அமைப்பிலுள்ள கணவன் இறந்தபிறகு துணையின்றி இருக்கும் விதவைத் தாயை ஒரு கதையில் ஆதவன் சமூக அக்கறை கொண்டு அலசி ஆராய்ந்துள்ளார். விதவைத் தாயின் அவலங்களையும் சமூக இடர்ப்பாடுகளையும் மிக இயல்பாகக் காட்டியுள்ளார்.

'தற்கொலை' என்னும் கதையில் தற்கொலையின் நியாயத்தையும், தற்கொலையின் காலச் சூழலையும் ஒரு நொடியில் நிகழும் தடுமாற்றத்தையும் பெரும் இடர்ப்பாக ஆதவன் இனம் கண்டுள்ளார். கனகு, கணேசன், மகள் அன்னத்தாய், மகன் சண்முகன் ஆகியோரை உறுப்பினர்காளக் கொண்ட தனிக்குடும்ப அமைப்பினையும், சீத்தம்மா - பொன்னையாபிள்ளை, மகள்கள் ஆவுடையம்மாள், மரகதம், மகன் முருகன் முதலான குடும்ப உறுப்பினர்களின் மன உணர்வையும் ஆதவன் சிறுகதைப் படைப்புகளில் பெறமுடிகிறது.

## சாதியின் நிலைப்பாடுகள்

தொழில் அடிப்படையிலும் பிரம்மாவின் பகுப்பு அடிப்படையிலும் சாதியம் தோன்றியதாகத் தொன்மைக்கால இலக்கியங்கள் சுட்டுகின்றன. உளவியலாரின் கருத்துப்படி சாதி உணர்வு என்பது ஒருவிதமான தாழ்வு மனப்பான்மை ஆகும். தன்னைச் சமூகத்தில் முன்னிறுத்த முடியாதவனே சாதியத்தால் பின்தள்ளப்படுகிறான். எல்லாவற்றிற்கும் அடிப்படையான நிகழ்வு மனித நடவடிக்கைகளும் செயல்பாடுகளுமேயாகும். இதுபோன்ற அடையாளம் தான் ஒரு மனிதனை உணர்ந்தோன் என்றி நிலைப்பாட்டிற்குக் கொண்டு செல்கிறது. சமுதாயம் எவரையும் ஒதுக்குவதில்லை; அவர்கள் ஒழுகுகின்ற முறைகளின் அடிப்படையிலேயே ஒதுங்கிப் போகிறார்கள். இதனையே சாதியத்தின் தலையாய கோட்பாடாக உளவியலார் கருதுகின்றனர்.

சாதி என்னும் சொல் தொடக்க காலத்தில் ஒரே வகையான உடலமைப்புடைய உயிரினத் தொகுதியைக் குறிக்கப் பயன்பட்டிருப்பதைத் தொல்காப்பியர்,

*நீர் வாழ் சாதியும் அது பெறற்குரிய* (தொல். இளம். 588)

எனக் குறிக்கிறார். அயல்நாட்டைப் பொறுத்தவரை நிற அடிப்படையில் சாதிவெறிச் சிக்கல் எழுகிறது. இந்தியாவைப் பொறுத்தவரை குல அடிப்படையிலும், இன அடிப்படையிலும் இத்தகைய பாகுபாடுகள் வகுக்கப்பட்டுள்ளன.

## சாதி பற்றிய சிந்தனை

எல்லோரும் ஓர் குலம்; எல்லோரும் ஓர் இனம் என்னும் முழக்கம் புகழ்பெற்றது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உலகியல் கோட்பாட்டை வகுத்த தமிழரும் காலவெள்ளத்தில் நிலைத்து நிற்கின்றனர். எல்லோரும் ஒன்றே எனக் கூறியவர்கள் கூடப் பழகிப் பார்த்தபின் பாலும் புளிக்கும் என்கின்ற நிலையில் சாதியக் கோட்பாட்டை முற்றிலும் வரவேற்பவர்களாகவே பின்தங்கி உள்ளனர்.

ஆதவன் சிறுகதைப் படைப்புகளில் சாதியத்தின் தன்மை அருவெறுக்கும் திசையில் அமையவில்லை. வர்க்க ரீதியில் மட்டுமே திருணமத்திற்குத் தடையாக அமைதல், ஆசிரியர் - மாணவர்கள் உறவுநிலைகளில் தடுமாற்றம், வகுப்புத் தோழர்களுக்கிடையே மனமாற்றம், நவீன உலகத்தில் காதலிக்கும் இளைஞர்களிடத்தில் ஏற்படும் பரிமாற்றம் போன்றவற்றை ஆதவன் தம் சிறுகதைப் படைப்புகள் வழி தெள்ளத் தெளிவாக வெளிக் கொணர்ந்துள்ளார்.

# தமிழ் ! எத்தனை தமிழ் !!

கவிமாமணி சேலம் பாலன்
ஈரோடு

செந்தமிழ், வண்டமிழ், தீந்தமிழ், மென்தமிழ்,
பைந்தமிழ், ஒண்டமிழ், பழந்தமிழ், வெல்தமிழ்,
இன்தமிழ், தென்றமிழ், எழிற்றமிழ், தொன்தமிழ்,
தென்னன் தமிழ், தனித்தமிழ், சீர்மன்னு செந்தமிழ்,
மன்னர் காத்தமிழ், மாவுலகின் மூத்த தமிழ்,
அருந்தமிழ், தாய்த்தமிழ், அரிய தமிழ், தூய்தமிழ்,
ஞானத் தமிழ், சொற்றமிழ், நற்றமிழ், பூண்தமிழ்,
மோனத் தமிழ், மறைதமிழ், முத்தமிழ், உயர்தமிழ்,
கனித்தமிழ், அன்னைத் தமிழ், கன்னித்தமிழ், உயர்தமிழ்,
நனிதமிழ், நந்தமிழ், நல்லிசைத் தமிழ்
தெளிதமிழ், இருந்தமிழ், திறந் தமிழ், ஸாற்றமிழ்,
ஒளிதமிழ், நிறைதமிழ், உணர்தமிழ், இறைத்தமிழ்,
சங்கத்தமிழ், சந்தத்தமிழ், தண்னேரிலாத் தமிழ்,
சங்க முகத்தமிழ், தாங்குதமிழ், முதுதமிழ்,
அணிதமிழ், வளத்தமிழ், ஆன்றதமிழ், ஒலிதமிழ்,
மணித்தமிழ், சித்ரத்தமிழ், வான்தமிழ், தெய்வத்தமிழ்,
வீறுதமிழ், செய்தமிழ், விளங்குதமிழ், கொடுந்தமிழ்,
கூறுதமிழ், சேய்தமிழ், கூர்தமிழ், மூவர்த்தமிழ்,

பழந்தமிழ், கோதைதமிழ், பண்புத்தமிழ், இனித்ததமிழ்,
அழகுதமிழ், நிலைதமிழ், அருமைத்தமிழ், பொங்குதமிழ்,
முந்துதமிழ், தெள்ளுதமிழ், முதிர்தமிழ், இன்பத்தமிழ்,
அந்தமிழ், லாததமிழ், அமிழ்தத்தமிழ், வளர்தமிழ்,
செழுந்தமிழ், ஐந்தமிழ், தீதில் லாததமிழ்,
பழுத்ததமிழ், நயத்தமிழ், பண்பார் பிள்ளைத்தமிழ்,
வரைதமிழ், இயற்றமிழ், வனப்புத்தமிழ், மீள்தமிழ்,
கரையில்தமிழ், கலைத்தமிழ், கவர்தமிழ், பழகுதமிழ்,
கொஞ்சுதமிழ், மாத்தமிழ், குளிர்ஸாதி கைத்தமிழ்,
விஞ்சுதமிழ், காப்புதமிழ், விந்தைதமிழ், நங்கைதமிழ்,
தங்குதமிழ், தளிர்தமிழ், சாற்றுதமிழ், ஆதிதமிழ்,
கொங்குதமிழ், வாழ்தமிழ், கோத்தமிழ், எளிதமிழ்,
திருநெறிய தமிழ், தேம துரத்தமிழ்,
கருணைத்தமிழ், கவின்தமிழ், களிதமிழ், மேன்மைத்தமிழ்,
பன்ன லந்தமிழ், பண்ணிசைத் தமிழ், நற்
கன்னல்தமிழ், ஒளிர்தமிழ், காசினி போற்றுந்தமிழ்,
ஓசைத்தமிழ், தனித்தமிழ், உளங்கவர் இளந்தமிழ்,
ஆசைத்தமிழ், பக்தித்தமிழ், அற்புதத் தமிழ், பெருஞ்
சீர்மலி செந்தமிழ், சீரார்ந்ததமிழ்,
கார்தமிழ், மாண்தமிழ், நேர்தமிழ், கணினித்தமிழ்,
அறிவியல் தமிழ் என்ன ஆயிரம் பெயருடன்
செறிவுடன் திகழ்வது உயர்தனிச் செம்மொழியே !

# மதுரைத் தமிழ்ச்சங்கம்
# 110ஆம் ஆண்டு தொடக்க நாள் விழா



தமிழ்ச் சங்கங்களின் ஒருங்கிணைப்பாளர் திரு. மு. நாகேசுவரன் அவர்களுக்கு மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைவரும், செந்தமிழ்க் கல்லூரிச் செயலாளரும் பொன்னாடை அணிவித்து நினைவுப்பரிசு வழங்குகின்றனர்.




தமிழ் மொழிக்குத் தனிப்பெரும் சங்கத்தை முதன் முதலில் தோற்றுவித்த வள்ளல் பொன். பாண்டித்துரைத்தேவர் அவர்களின் புகழைப் போற்றி மகிழ்கிறார் ஸ்ரீலஸ்ரீ குருமகா சன்னிதானம் மதுரை ஆதீனம் அவர்கள். உடன் முகவை மன்னரும், மகாராணியாரும் மற்றும் இரு பெரும் செயலாளர்களும்.




தமிழுக்குத் தலைநகரமாக தமிழ்ச் சங்கம் கண்ட மதுரை மாநகரம்தான் விளங்க வேண்டும் என்று சிறப்புரை வழங்குகிறார் தமிழ்ச்சங்கச் செம்மல் திரு. தமிழண்ணல் அவர்கள்.

RNI Regd. No. 5508/56 November 2010

# மதுரைத் தமிழ்ச்சங்கம்
## 110ஆம் ஆண்டு தொடக்க நாள் விழா



விழா மேடையில்.....

அனுப்புநர்,

**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை - 625 001

*From*

**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by V. Govindarajan, published by R. ALAGUMALAI M.A., M.Phil. on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West Masi Street, Madurai - 1, and published at 54, Tamil Sangam Road, Madurai. Editor R. ALAGUMALAI M.A., M.Phil.